இந்திய வரலாறு

"நேற்றைய நமது அன்றாட நடவடிக்கைகள் இன்றைய வரலாறாம். அவ்வப்போது நிகழும் நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்படாததால் இந்திய வரலாற்றை வடிவமைத்தலில் மிக்க சிரத்தையானது" – ரேடியன்

கால மாறுபாட்டின் பல்வேறு செயல்பாடுகளின் தாக்கம் மனித செயல்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் - வரலாற்றுக் கொள்கை – வி. ஏ. ஸ்மித்

வியப்பென்றால், அது இந்தியாவே – ஏ.எல.பாஷம்

- வரலாற்றின் தந்தை என்று அழைக்கப்படுபவர் **ஹெரொடோடஸ் (கிரேக்கம்)**
- **கற்காலம் - பிறர் அறியும் வண்ணம்**
- **ஆவணப்படுத்தியதுதான் இவரின் சிறப்பு**
- மிக பழைய கற்காலம் 250000–100000 கி.மு.
- நடு பழைய கற்காலம் 100000–40000 கி.மு.
- புதிய பழைய கற்காலம் 40000-10000 கி.மு.
- கடைசிக் கற்காலம் 10000-4000 கி.மு.
- புதிய கற்காலம் 5000-25000 கி.மு.

பழைய கற்காலம் (Palaeolithic)

- பழைய கற்காலத்திற் இறுதிகாலம் சுமார் கி.மு. 35000 முதல் கி.மு. 10000.
- மக்கள் நீக்ரிட்டோ இனத்தைச் சார்ந்தவர்கள்.
- நாடோடிகளாக வாழ்ந்தனர்.
- குவார்ட் சைட் என்ற கற்களைப் பயன்படுத்தினர்.
- வேளாண்மை, கால்நடைகள் பயன்கள் தெரியாது.
- மரப்பட்டைகள், தழைகள் ஆடையாக கொண்டனர்.
- பச்சை காய்கறிகள், விலங்குகளின் இறைச்சிகளை உண்டனர்.
- நெருப்பின் பயன் தெரியாது.
- முக்கிய தொழில் வேட்டையாடுதல் ஆகும்.
- குகைகளில் ஓவியம் தீட்டினர்.
- மட்பாண்டம் செய்யத் தெரியாது.
- இறந்தவர்களை புதைத்தனர்.
- 1863-ஆம் ஆண்டு சென்னைக்கு அருகே பல்லாவரத்தில் இராபார்ட் புரூஸ்.்.போர்ட் கைக்கோடரி கண்டுபிடித்தார்.
- வட இந்தியாவில் காஷ்மீர், பஞ்சாப், மத்தியப்பிரதேசனம், ஓரிசா, வங்காளம், பீகார், தென்இந்தியாவில் பீஜப்பூர், பெல்காம், தார்வார், ஹைதராபாத், சென்னைக்கு அருகே செங்குன்றம், அத்திரிபாக்கம் ஆகியவை பழைய கற்காலம் நாகரிக மையமாகும்.

புதிய கற்காலம் (Neolithic)

- மக்கள் நிரந்தரமாக வாழத் தொடங்கினார்.
- பளபளப்பான தேவைக்கேற்ற வடிவங்களில் கற்களை உருவாக்கினர்.
- அறிவியல் வளர்ச்சியின் முதல்படியான சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது.
- வேளாண்மை செய்தனர்.
- முதன் முதலில் வளர்த்த பிராணி ஆடு ஆகும்.
- பசு, எருமை, ஆடு நாய் விலங்குகளை பயன்படுத்தினர்.
- நெருப்பை உண்டாக்கினர்.
- மற்பாண்டங்கள் செய்தனர்.
- பருத்தி, கம்பளி நூல் நூற்றனர்.
- பழங்கள், காய், மீன், பால் கறிகள் உண்டனர்.
- கடற்பயணம் மேற்கொண்டனர்.
- வேட்டையாடுதல், நடனமாடுதல், போன்ற சித்திரங்களை தீட்டினர்.
- இறந்தவர்களை மற்பாண்டங்களில் இட்டு புதைத்தனர்.
- டால்மென்ஸ் எனப்படும் கல்லறையின் தூண்களை உருவாக்கினர்.
- தென்னிந்தியாவில் நாகார்ஜுனகொண்டா, மாஸ்கி, பிரம்மகிரி, காஷ்மீர் பள்ளத்தாக்கு, தக்காணபீடபூமி, சேலம், கடப்பா, பெல்லாரி, அனந்தபூர், தெலுங்கானா, குஜராத், கத்தியவார் ஆகியவை புதிய கற்கால இடங்களாகும்.

உலோகக்காலம்

- செம்பு பயன்படுத்தப்பட்ட காலம் செம்புக் காலம்.
- மனிதன் பயன்படுத்திய முதல் உலோகம் செம்பு ஆகும்.
- கி.மு. 800 முதல் 150 இடையே உள்ள காலம் இரும்பு காலம்.
- இரும்புகாலத்தில் கலப்பை, கத்தி போன்றவை செய்யப்பட்டது.
- உலோகக்கால மக்கள் செம்பு, இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களை பயன்படுத்தினர்.
- மக்கள் பளிங்கு – கண்ணாடி ஆகியவற்றை பயன்படுத்தினர்.
- உலோக காலம் மூன்றாக பிரிக்கப்பட்டது.
  1) செம்புக்காலம்
  2) வெண்கலக்காலம்
  3) இரும்புக்காலம்
- ஆதிச்ச நல்லூர், புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய இடங்களில் அதிகமான உலோகக் கருவிகள் கிடைத்துள்ளது.
- இறந்தவர்களின் நினைவாக நினைவுச் சின்னம் எழுப்பினர்.
- இறந்தவர்களை முதுமக்கள் தாழி எனப்படும் மற்பாண்டங்களில் இட்டு புதைத்தனர்.
- தெய்வ வழிபாட்டு முறை காணப்பட்டது.
- ஆதிச்சநல்லூரில் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளது.

திராவிட நாகரிகம்

- காலத்தால் பழைமையானது திராவிட நாகரிகம்.
- குமரில பட்டர் எழுதிய Tantravrttika என்ற நூலில் இருந்து திராவிடம் என்ற சொல்லை கார்டுவெல் தாம் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில்

முதன் முதலில ஆங்கிலத்தில் கையாண்டுள்ளார்.

சிந்து சமவெளி நாகரிகம் (Indus Valley Civilization)

- ஹரப்பாவின் சிதைவடைந்த பகுதிகளை சார்லஸ் மேசன் என்பவர் தம்முடைய Narrative of Various Journeys In Balochistan, Afghanistan and Punjab, என்ற நூலில் குறிப்புகளில் 1838ல் தெரிவித்துள்ளார். அக்காலத்தில் அதன் முக்கியத்துவம் உணரப்படவில்லை.
- இந்நாகரிகத்தின் பெரும் பகுதி காக்ரா நதிக்கரையின் மேல் அமைந்துள்ளதால் இதனை Indus Ghaggar – Hakra Civilization என்றும் கூறுவர். சரஸ்வதி நதியின் அடிப்படையில் சிந்து-சரஸ்வதி நாகரிகம் என்றும் கூறுவர்.
- சர் ஜான்மார்சல் கூற்றுப்படி கி.மு. 3250 முதல் 2750 வரை
- 1945ஆம் ஆண்டு அகழ்வராச்சி நடத்திய மார்ட்டிமர் வீலர் கி. மு. 2500 ஆண்டிற்கும் கி.மு. 1500 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் சிந்து சமவெளி நாகரிகம் காலம் என குறிப்பிட்டுள்ளார்.
- அகர்வாலின் கூற்றுப்படி கி.மு. 2300 முதல் 1750 வரை
- 1784ல் Asiatic Society of India என்ற சங்கத்தை சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் நிறுவினார். இச்சங்கம் பண்டைய கல்வெட்டுக்களை சேகரித்தது.
- இவற்றில் உள்ள எழுத்துக்களை 1837ல் ஜேம்ஸ் பிரின்செப் என்பவர் படிக்கும் முறையை கண்டுபிடித்தார்.
- கி.பி. 1826ம் ஆண்டு ஹரப்பாவுக்குச் சென்ற சார்லஸ் மேசன் என்பவர் அங்கு குடியிருப்புகளின் சிதைவுகளைக் கண்டார்.
- 1872ம் ஆண்டு சர் அலெக்சாண்டர் கன்னிஸ்ஹாம் ஹரப்பாவின் சில பொருட்களை சேகரித்தார்.
- 1862ல் தொல்லியல் துறை நிறுவப்பட்டது. இதன் முதல் இயக்குநராக அலெக்சாண்டார் கன்னிங்ஹாம் நியமிக்கப்பட்டார். இவர் இந்திய தொல்பொருள் இலாக்காவின் தந்தை எனப்பட்டார்.
- Alexander Cunningham, the first Director – General of the Archaeological Survey of India (ASI), (ASI - தற்போது பண்பாட்டுத்துறையின் கீழ் உள்ளது)
- கன்னிங்ஹாம் புத்த மதம் தொடர்புடைய காஞ்சி, சாரநாத், புத்தகயா, தட்சசலம் போன்ற இடங்களில் உள்ள அரிய வரலாற்று சின்னங்களை கண்டுபிடித்தார்.
- பின் தொல்பொருள் ஆராய்ச்சி துறை நிறுவப்பட்டது. சார் ஜான் மார்ஷல் என்பவர் அதன் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இவரையும் தொல்லியியல் துறையின் தந்தை என்று கூறுவர்.
- **தொல்பொருள் ஆய்வின் அடிப்படையில் இந்திய வரலாற்றை எழுதியவர்: வி.ஏ. ஸ்மித் ஆவார்.**
- சர் ஜான் மார்சல் என்பவர் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி தலைவராக இருந்த போது அவர் 1922ம் ஆண்டு **ஆர்.டி.பானர்ஜி** என்பவருட்ன சேர்ந்து ஒரு புதைந்து கிடந்த

புத்த மடாலய அகழ் ஆராய்ச்சி பணியில் இருந்த போது சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடித்தார்.

- அதன் பிறகு ஜே. எஜ். மேக்கே, ஜி. எ.ஃப். டேல்ஸ், எம். எஸ். வாட்ஸ் ஆகியோர் மொகஞ்சதாரோவில் அகழிவராய்ச்சியை மேற்கொண்டனர்.
- சிலர் இதனை Garden of Sind என்றும் Nakhlistan என்றும் கூறுவர். சிந்து நதி இதனை 9 முறை அழித்ததாகவும் 9 முறை இந்த நகரம் கட்டப்பட்டது என்றும் கூறுவர்
- இவர்கள் சுமேரியா, பாபிலோனியா, எகிப்து போன்ற இடங்களில் வாணிகம் செய்தனர்
- சுமேரியா நாகரிகத்திற்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் ஒற்றுமை இருந்ததால் இதனை இந்தோ-சுமேரிய நாகரிகம் என்றும் பின் இது தனிநாகரிகம் என்பதால் சிந்து சமவெளி நாகரிகம் என்றும் அழைக்கப்பட்டது.
- சிந்து சமவெளி மக்கள் சிவனை வணங்கினர். ஹரப்பா நகரங்களில் இலிங்க உருவங்கள் கிடைத்துள்ளன. தாய்த் தெய்வம். விலங்குகள் சூழப்பட்ட மூன்று தலைக்கொண்ட யோக நிலையில் உள்ள பசுபதி எனப்படும் கடவுளின் முத்திரை கிடைக்கப்பெற்றது.
- **Nineteenth century**
- 1875 – Report of Alexander Cunningham on Harappan seal
- **Twentieth Century**
- 1921 M. S. Vats begins excavations at Harappa
- 1925 Excavations begin at Mohenjodaro
- 1946 R. E. M. Wheeler excavates at Harappa
- 1955 S. R. Rao begins excavations at Lothal
- 1960 B. B. Lal and B. K. Thapar begin excavations at Kalibangan
- 1974 M. R. Mughal begins explorations in Bahawalpur
- 1980 A team of German and Italian archaeologists begins surface
- explorations at Mohenjodaro
- 1986 American team begisn excavations at Harappa
- 1990 R. S. Bisht begins excavations at Dholavira

சிந்து சமவெளி நாகரிகத்தின் முக்கிய இடங்கள்

1. மொகஞ்சதாரோ 2. ஹரப்பா 3. லோதால் 4. களிபங்கன் 5. பாண்குவராஹி 6. அம்ரி 7. ரூப்பர் 8. சாண்கு – தாரோ

மொஹஞ்சதாரோ (125 ஹெக்டேர் பரப்பு)

- 1922-ல் ஆர். டி. பானர்ஜி அகழிவராய்ச்சி செய்தார்.
- சிந்து நதிக்கரை மேல் அமைந்துள்ளது.
- தற்போது பாகிஸ்தானில் உள்ள சிந்து பகுதியில் லார்கானா மாவட்டத்தில் உள்ளது
- இரும்பின் பயன் தெரியவில்லை.
- நகரங்கள் நன்கு திட்டமிட்டு கட்டப்பட்டிருந்தன.
- தெருக்கள் நேராகவும் அகலமாகவும், கிழக்கு

மேற்காகவும், வடக்கு தெற்காகவும் அமைந்துள்ளது.

- மொஹஞ்சதாரோவில் பெரிய குளியல் குளம் ஒன்று உள்ளது. இது 11.8 மீ நீளமும், 7.01 மீ அகலமும் 2.43 மீ ஆழமும் கொண்டது. ஆடைமாற்றும் அறை காணப்பட்டது. இக்குளத்தில் நீர் உள்வர செங்கல்லால் குழாய்கள் உள்ளன. நீருக்குள் செல்ல அகலமான படிக்கட்டுகள் இருந்தன. சமூகக் கூடமும் மாடிக்கட்டிடமும் காணப்பட்டது.
- தானியக்களஞ்சியமும், நடனமாது சிலையும் கண்டெடுக்கப்பட்டது.
- கோதுமை, பார்லி முக்கிய உணவாகும்.
- மக்கள் ஓய்வு நேரத்தில் சதுரங்கம் விளையாடினர்.
- இசை, நடனம், கோழிச் சண்டை, காளை சண்டை போன்றவை நடைபெற்றது.
- மக்கள் சித்திர எழுத்துக்களை பயன்படுத்தினர். இவ்வெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களே என இராசு பாதிரியார் கூறுகிறார்.
- அவர்கள் வலமிருந்து இடமாகவும் இரண்டாவது வரியை இடமிருந்து வலமாகவு எழுதினார்.
- சிந்து சமவெளி எழுத்துக்களுக்கு Pictograph என்று பெயர். இது எகிப்து ஹைரோகுளிபிக் மற்றும் சமேரியர் க்யுனிபார்ம் எழுத்துகள் கலந்தது. ஒற்றைக் கொம்பு உடைய எழுத்து உடைய முத்திரை காணப்பட்டது.
- இந்நாகரிகத்தின் அமைப்பு இங்கிலாந்தின் லாங்காஷயர், மான்செஸ்டர் நகரைத்தை போன்று உள்ளதாக சர்ஜான் மார்சல் கூறுகிறார்.
- மொகஞ்சதாரோ என்ற சொல்லுக்கு Mount of Killed, Mount of Dead, Mount of Confluence என பல பொருள்பட பொருள் உண்டு

ஹரப்பா

- 1921 – 23 யில் தயாராம் சகானி எனப்வரால் அகழ்வராய்ச்சி செய்யப்பட்டது.
- ஹரப்பா நாகரிகம் நிலவிய காலம் கி.மு. 3250 முதல் கி.மு. 2750 வரை ஆகும். இந் நாகரிகம் செம்புக் கற்காலம் என்று அழைக்கப்பட்ட புதிய உலோக காலத்தைச் சார்ந்தது.
- தற்போது பாகிஸ்தானில் உள்ளது.
- இந்நகரம் மொஹஞ்சதாரோவை விடசற்று பெரியது.
- சிந்து மாவட்டத்தில் இலார்க்கனா என்ற மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஹரப்பா – மொகஞ்சதாரோ இடைத்தூரம் 640 கி. மீ. ஆகும்.
- ஹரப்பா ராவி நதிக்கரையின் மேல் மாண்டகோமரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இதில் மிகப்பெரிய தானியக்களஞ்சியங்கள் 6 உள்ளது.
- இது 47.71 மீ நீளமும் 15.23மீ அகலமும் கொண்டது.
- இம்மக்கள் எருதுகளை வணங்கினார்.
- பருத்தி பயிரிட்டனர்.
- 16 மற்றும் அதன் மடங்குகளை பயன்படுத்தினர்.
- குதிரை பற்றி இவர்களுக்கு தெரியாது.

- ஹரப்பா பண்பாட்டின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு முத்திரைகள் ஆகும். முத்தரைகளில் காளையின் உருவங்களும் பிறவிலங்குகளின் உருவங்களும் காணப்படுகிறது. வியாபாரத்திற்கு இவர்கள் முத்திரைகளை பயன்படுத்தினர்.

காளிபங்கன்

- இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ளது.
- காளிபங்கன் சரஸ்வதி நதிக்கரையின் (காக்கரா) மீது இது அமைந்துள்ளது
- உழவு தொழில் மேற்கொள்ளப்பட்டது

லோதல்

- எஸ்.ஆர்.ராவ் என்பவரால் 1957யில் கண்டுபிடிக்கப்பட்டது.
- குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் மாநிலத்தில் உள்ளது.
- சிந்து சமவெளி நாகரித்தின் வாணிக துறைமுக நகரம் லோதால்.
- இது பாக்குவார் நதிக்கரையின் மீது அமைந்துள்ளது.
- இது வெளி நாட்டுடன் தொடர்புடையது.
- இது மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் துறைமுகம்.
- இந்நாகரிகம் ஆரியர் வருகை அல்லது ஆற்று வெள்ளத்தால் அழிந்திருக்கக்கூடும்.

தோலவிரா

- மிகப்பெரிய அகழ்விடம். குஜராத்தில் உள்ளது. நீர்த்தேக்கம் உள்ளது

ரூப்பர்

- இது பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது
- ஹரப்பா அல்லாத அதற்கு முந்தைய காலத்தைச் சார்ந்தது.
- 1953ல் ஒய்.டி. சர்மா என்பவரால் அகழ்வராய்ச்சி செய்யப்பட்டது.

பான்வலி – (ஹரியானாவில்)

- ஹரப்பா அல்லது அதற்கு முந்தைய காலத்தைச் சார்ந்தது.

ஆலம்கீர்பூர்

- மேற்கு உத்திரப்பிரதேசத்தில் உள்ளது
- சிந்து சமவெளி நாகரிகம் என்ற தலைப்பில் பல்வேறு வினாத்தாளில் இருந்து எடுக்கப்பட்ட அசல் வினாக்கள்

ஆரியர்கள்:

- முந்திய வேதகாலம் (இருக்கு வேத காலம்) கி.மு. 1500-800
- பிந்திய வேதகாலம் (கி.மு. 1000-600)
- காப்பியங்களின் காலம்
- ஆரியர்கள் மத்திய ஆசியாவில் இருந்து வந்தவர்கள் என்று மாக்மில்லர் கூறுகிறார்.
- பாலகங்காதர திலகர் இவர்கள் ஆர்டிக் பிரதேசத்தில் இருந்து வந்தவர்கள் என்று கூறுகிறார்.
- ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக படையெடுப்பின் வாயிலாக இந்தியாவிற்குள் வந்தவர்கள்.
- ஆரியர்கள் முதன் முதலில் குடியேறிய பிரதேசம் சப்தசிந்து எனப்படும். சப்தசிந்து என்பது பஞ்சாப், காஷ்மீர், சிந்து, காபூல், காந்தாரம் என்பது பஞ்சாப், காஷ்மீர், சிந்து, காபூரு, காந்தாரம் ஆகும்.
- ஏழு நதிகள் ஓடும் பிரதேசம் என்பதால் சப்தசிந்து எனப்பட்டது. ஏழு ஆறுகள்: சிந்து, ஜீலம், சீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ், சரஸ்வதி

- பின்பு இவையனைத்தும் சேர்ந்து ஆரியவர்த்தா எனப்பட்டது.
- ரிக்வேதம் முன்வேதகால ஆரியர்கள் குடியற்றப்பகுதிகளை பற்றி அறிய உதவுகிறது.
- குபா-காபூல்
- ஸீவஸ்து - ஸ்வாத்
- குதுமு – குரம்
- ரிக் வேதத்தில் நர்மதை நதி விந்தியமலை பற்ற குறிப்பு காணப்படவில்லை
- முற்கால ஆரியர்கள் குதிரைகளப் பற்றி அறியவில்லை

வேதக்காலம்

- வேதக்கால சமுதாயத்தின் அடிப்படை குடும்பம் ஆகும்.
- இது ஒரு கிராம நாகரிகம் ஆகும்
- இருக்கும் வேத காலத்தில் புரோகிதர், சேனானி, கிராமனி ஆகியோர் இருந்தனர்.
- ஆயலா, முட்கலனி, விஸ்வரா, லோபாமுத்திரா, கோஷா ஆகிய புலமை பெற்ற பெண்டிர் இருக்கு வேத காலத்தில் இருந்தனர்.
- இசை, நடனம், சூதாடுதல் இருக்கு வேத கால மக்களின் பொழுது போக்கு ஆகும்.
- வருணன், இந்திரன் (The God of Strength) அக்னி (The God of Fire) சூரியன், மாருதி என்ற புயற்கடவுள், வாயு (The God of Winds), ருத்திரா, உஷா (The Goddess of Dawn), பிருத்வி (The Goddess of Earth), சோமா (The God of intoxicating juice), எமன் (The God of Death), வருணா (The God of Water), ஆகிய கடவுளர்களை வழிபட்டனர்.
- Jnana – Knowledge
- Bhakti – Devotion
- Bhajans – Devotional songs
- Satang – In the company of the pious
- Samsara – Worldliness
- Vairagya – Detachment
- இருக்கு வேதகால மக்கள் சூரியக் கடவுளை மித்திரன், சூரியன், சாவித்திரி புஷன், விஷ்ணு, விருக்ரமா ஆகிய பெயர்களில் வழிபட்டனர்.
- கோதுமை, பார்லி, பால், பழம், மரக்கறி உணவையும், மாமிச உணவையும் உண்டனர்.
- இது பண்டமாற்று முறை (Barter) காணப்பட்டது.
- இருக்கு வேதகால ஆரியர்கள் **நிவி** என்ற கீழாடையையும், **வாசஸ்** என்ற உள்ளாடையையும், **அதிவாசஸ்** என்ற மேலாடையையும் அணிந்தனர்.
- வேளாண்மை, கால்நடை வளர்த்தல், வாணிபம் செய்தல், நெசவு நெய்தல், தச்சு வேலை, அணிகலன்கள், மருத்துவம், சோதிடம், நாவிதம் ஆகிய தொழில்களையும் செய்தனர்.
- குடும்பத் தலைவர் விராஜபதி (அ) கிரகபதி என்றும் அழைக்கப்பட்டார்.
- இந்திரன் என்ற கடவுள் பிற்கால வேதகாலத்தில் செல்வாக்கினை இழந்தார்.
- சோமா, சுரா ஆகிய மதுபானங்கள் காணப்பட்டது.

- சேனாப் நிதி Akesines என கிரேக்கர்களால் அழைக்கப்பட்டது.

வேதங்கள்

- வேதம் என்றால் அறிவு எனப் பொருள்படும்.
- வேதங்களை நான்காக தொகுத்தவர் வேத வியாசர்.

நான்கு வகை:

1. இருக்கு வேதம்
2. யஜீர் வேதம்
3. சாம வேதம்
4. அதர்வன வேதம்

வேதங்களை நான்காக பிரிக்கப்பட்டது

1. மந்திரங்கள்
2. பிரமாணங்கள்
3. உபநிஷத்துக்கள்
4. ஆரண்யங்கள்

ரிக் வேதம் (1700 – 1100 கி.மு)

- உலகின் பழைமையான சமய நூல்
- ரிக் வேத பாடல்களை வியாச முனிவர் சேகரித்தார். இந்தியாவின் வடமேற்கு பகுதி மற்றும் சிந்துச் சமவெளி, வட மேற்கு பகுதியில் தற்போது பாகிஸ்தானில் உள்ள சுவாத் என்ற பகுதி ரிக் வேதத்தில் குறிப்பிடப்படுகிறது. (சுவாத் பகுதி பாகிஸ்தானில் உள்ள சுவாத் என்ற பகுதி ரிக் வேதத்தில் குறிப்பிடப்படுகிறது. (சுவாத் பகுதி பாகிஸ்தானின் சுவிட்சர்லாந்து எனப்படுகிறது)
- ஏழு நதிகள் பாய்ந்த காரணத்தால் பலதரப்பட்ட கடவுள்களைப் பற்றி குறிப்பிடுகிறது.
- கடவுளை போற்றப்படும் பக்தி பாடல்கள் உள்ளது.
- சூரியனை வழிபடும் காயத்திரி மந்திரம் இதில் உள்ளது.
- உருவ வழிபாடு காணப்பட்டது.
- ஓம் என்ற சொல் இருக்கு வேதத்தில் காணப்படுகிறது.
- ரிக் வேத காலத்தில் சாதி வேறுபாடுகள் ஏதுமில்லை.
- ரிக் வேதத்தில் உள்ள பாடல்கள் 1028.
- வேதங்களில் பழமையானது.
- பாடல்களில் புனித தன்மை காப்பாற்ற மிக நீண்ட காலமாக ரிக் வேதத்தை வாய் வழி மூலமாக சொல்லி வந்தனர்.
- நான்கு வேதங்கள் எழுதப்பட்ட காலப்பகுதி சம்கிதா.
- ரிக் வேதம் 10 மண்டலங்களில் 1017 செய்யுள்களாக இறைவனைப் பற்றியும் 10வது மண்டலத்தில் சமூக, அரசியல், பொருளாதார சாதி முறை தோன்றிய வரலாற்றையும் கூறுகிறது.
- நான்கு வருணங்கள் ரிக் வேதத்தில் குறிப்பிடப்படுகிறது.
- முதல் மண்டலம் மற்றும் 10வது மண்டலம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்று கூறுவர்.
- முதல் மண்டலத்தில் 191 பாடல்கள் உள்ளது. அக்னியைப் பற்றி குறிப்பிடுகிறது. அக்னி என்ற சொல் ரிக் வேதத்தின் துவக்க சொல்லாகும்.

மண்டலம்	பாடல்	குறிப்பிடுவது
1	191	அக்னி
2	43	..ritsamada முனி

3	62	.. svamitra gathinah, காயத்திரிமந்திரம் உள்ளது.
4	58	..nadeva gautama
5	87	.. ரிஷி, உஷா, சாவித்ரி
6	75	பிரகஸ்பதி வழியில் வந்த ஆங்கிரஸ் ரிஷி
7	104	.. asistha maitravaruni
8	103	..ன்வ, ஆங்கிரச ரிஷி
9	114	
10	191	Nadistuti sukta,

- Nadistuti Sukta – நதிகள் மற்றும் வேத கால புவியில் அமைப்புகளைப் பற்றியும்
- Purusha Sukta – வேதகால சமுதாய அமைப்பு.
- Nasadiya Sukta – தோற்றங்கள் குறித்தும் திருமண மந்திரங்கள் இறப்பு குறித்த பாடல்கள் போன்றவைகளும் ரிக் வேதத்தில் அடங்கியுள்ளது.
- ரிக் வேதத்தில் யானை, மயில், மான், எருது மற்றும் இந்திய காட்டெருமை போன்ற மிருகங்கள் காணப்படுகின்றன.
- ரிக் வேதத்தில் புலி மற்றும் அரிசியைப் பற்றி குறிப்பிடப்படவில்லை.

பிராமணங்கள்

ரிக் வேத பிராமணங்கள்

- அய்த்ரேய பிராமணம்
- கௌஷிகி பிராமணம்

பிந்தைய வேத காலம் கி.மு. 1000 முதல் 600 வரை

- பிந்தைய வேத காலத்தில் மன்னர் கடவுள்களாக கருதப்பட்டார்.
- வடக்கு பகுதி அரசர்கள் வைராஜ்யா என்றும்
- தெற்குப் பகுதி அரசர்கள் - பாஸ்யா
- கிழக்குப் பகுதி அரசர்கள் - காமராஸ்யா
- மேற்கு பகுதி அரசர்கள் - ஸ்வராஜ்யா அழைக்கப்பட்டனர்.
- யஜுர், சாம், அதர்வண வேதங்கள், உபநிடதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் தோன்றிய காலம் பிந்திய வேதகாலம் எனப்படுகிறது.
- மன்னர்கள் அசுவமேத யாகம், ராஜசூயம், வாஜ்பயம், புருஷமேதம் போன்ற யாகங்களை செய்தனர்.
- அவர்கள் சாம்ராட், ஏக்ராட் சார்வபௌமி என்ற பட்டத்தை கூட்டிக் கொண்டனர்.
- பின் வேதகாலத்தில் கார்கி, மைத்ரேயி போன்ற கல்வியில் சிறந்த பெண்கள் இருந்தனர்.
- நிஷ்கா என்ற நாணயம் காணப்பட்டது.

யஜுர் வேதம்

- இது வெள்ளை யஜுர் வேதம் என்றும் கறுப்பு யஜுனர் வேதம் என்றும் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது.
- கருப்பு வேதம் பழைமையானது வெள்ளை வேதத்தில் பாடல்கள் உள்ளன.
- கருப்பு வேதத்தில் உரைநடை உள்ளது.
- சமஸ்கிருதத்தின் முதல் உரைநடை இதுதான்.
- யஜுர் வேதத்தை அத்வார்யூ என்ற பிராமணர்கள் பாடுவார்கள்
- வேள்விகள் செய்யும் முறைகள் அசுவமேதயாகம், ராஜசூயயாகங்கள் பற்றி யஜுர் வேதம் விளக்குகிறது.

- கிருஷ்ண பிராமணம் பல சம்ஹிதைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

சாம வேதம்

- சாம வேதம் இசை, தெய்வம், சோம யோகம் பற்றி விளக்குகிறது.
- சாம வேதம் மந்திரங்களைப் பற்றி விளக்குகிறது.
- 1810 அல்லது 1549 பாடல்களை உடையது.
- சோம வேள்வியின் போது பாடப்படுகிறது.
- உத்தி காத்ரி என்ற பிராமணர்கள் பாடுவார்கள்.

சாம வேத பிராமணங்கள்

- தண்டி மகா பிராமணம்
- சத்வின்ச பிராமணம்
- ஜெய்மினேய பிராமணம்

அதர்வண வேதம்

- இது பிரம்ம வேதம் என்று அழைக்கப்படுகிறது.
- பிரம்மத்தை அறியாமல் மோட்சம் அடைய முடியாது.
- ஸ்கம்மா எனப்படுவது பூமி
- பிரானா எனப்படுவது சுவாசம்
- காமா எனப்படுவது ஆசை
- கலா எனப்படுவது நேரம்

உபநிஷத்துக்கள் அதிகம் அடங்கியுள்ள வேதம் இதுவே ஆகும்.

- அமர்வண வேதத்தில் 73 பாட்டுக்கள் உள்ளது.
- 741 செய்யுள்களில் தீய சக்திகள், துர் தேவதைகள் பில்லி, சூனியம், வசியம் போன்ற கருத்துக்களை உடையது.
- கோத்திரம் என்ற சொல் உள்ளது.
- மருத்துவத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- பிராமணங்கள் Paippalada: Gopatha Brahmana

புராணங்கள்

- பெரும்பாலான புராணங்கள் குப்தர்கள் காலத்தைச் சார்ந்தது.
- புராணங்கள் 18 உபபுராணங்கள் 18 ஆகும்.

1. அக்கினி புராணம், விஷ்ணு பற்றி கூறுகிறது.
2. பிரம்ம புராணம், universe and cosmos பற்றி கூறுகிறது.
3. பாகவத புராணம், பக்தி யோகத்தையம் மற்றும் விஷ்ணுவின் 10 அவதாரங்களை குறிப்பிடுகின்றது.
4. பாவிஷ்ய புராணம் past repeats itself in future. Book of Prophecies என்று அழைக்கப்படுகிறது.
5. பிரம்மலைவார்த்த புராணம், விநாயகர், கிருஷ்ணா போன்ற கடவுள்களின் தோற்றம் மற்றும் அதற்கான காரணங்கள் பற்றி கூறுகின்றது.
6. பிரம்மானந்த புராணம்: லலிதா சகஸ்ரநாமம் உள்ளது.
7. கருட புராணம்: மனிதனின் இறப்புக்கு பின் நிகழக்கூடியவை பற்றி கூறுகிறது. கிருத்துவ மதத்தில் உள்ள நீதி வழங்கும் நாள் போன்றது.
8. கூர்த புராணம்: விஷ்ணுவின் கூர்ம அவதாரம்.
9. லிங்க புராணம்: லிங்கத்தின் அவசியம் மற்றும் பூமி தோற்றம்.
10. மச்ச புராணம்: விஷ்ணுவின் மீன்

அவதாரம்.

11. மார்க்கண்டேய புராணம், ஜமீனி மற்றும் மார்க்கண்டேயனுக்குமிடையே நடைபெறும் உரையாடல்.
12. நாரத புராணம்: புண்ணியத் தலங்கள்
13. பத்ம புராணம்: essence of religion and cosmos
14. கந்த புராணம்: முருகரின் வாழ்க்கை வரலாறு.
15. விஷ்ணு புராணம்: விஷ்ணு பற்றி கூறுகிறது.
16. வாயு புராணம்: காற்றுக் கடவுள் வாயுவைப் பற்றி கூறுகிறது.
17. வார்ஷ புராணம்: விஷ்ணு பற்றி கூறுகிறது.
18. வாமன புராணம்: விஷ்ணுவின் வாமன அவதாரம்.

வேத இலக்கியங்கள்:

- பிராமணங்கள் மற்றும் உபநிடதங்கள் வேத இலக்கியங்கள் எனப்படும். இவை சம்ஹிதஸ் என்றும் பிராமணஸ் என்றும் இருவகைப்படும்.
- பிராமணாஸ் மூன்று வகைப்படும்.

1. பிராமணங்கள் 2. ஆரண்யங்கள் 3. உபநிடதங்கள்

இவையனைத்தும் ஸ்ருதி எனப்படும்.

- வனத்தில் வாழும் முனிவர்கள் படிப்பதற்காக எழுதப்பட்டவை ஆரணயங்கள் ஆகும்.
- உபநிஷத்துக்கள் என்றால் அருகில் அமர்ந்து ரகசியமாக கேட்டல் எனப் பொருள்படும். இவை கி.மு. 800 – 500 வரை பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பெற்றது. மனிதனின் மரணம், ஆத்மா, மறு பிறப்பு குறித்து குறிப்பிடுகின்றது.
- இந்த மதத்தின் உயர்ந்த தத்துவங்கள் என உபநிஷத்துக்கள் ஆகும்.
- முக்கிய உபநிஷத்துக்கள்
- முண்டக உபநிஷத்துக்கள், பிரசண உபநிஷத்துக்கள், கீன உபநிஷத்துக்கள், அயித்ரேயே உபநிஷத்துக்கள், இஷா உபநிஷத்துக்கள், பிருக தண்யாகா உபநிஷத்துக்கள், காத்த உபநிஷத்துக்கள்

உப வேதங்கள்

- ஆயுர்வேதம் - மருத்துவம்
- தனுர் வேதம் - சண்டை
- காந்தார வேதம் - இசை
- சில்ப வேதம் - நுண்கலைகள்

வேதாந்தங்கள்

- 6 வேதாந்தங்கள் - சிக்ஷா, கல்பா, வியாக்கரணா, நிருக்தா, சீஷண்டா மற்றும் ஜோதிஷா
- சிக்ஷா – உச்சிரிப்புடன் தொடர்புடையவை
- கல்பா – பூஜை முறைகள்
- வியாக்கரணா - இலக்கணம்
- நிருக்தா – சொல்லிலக்கணம்
- சீஷண்டா – அளவு
- ஜோதிஷா – ஜோதிடம்
- இது வேதங்களின் முடிவுரை என அழைக்கப்படுகிறது.

தர்ஷணங்கள்

- ஆறு வகை இந்திய தத்துவப் பள்ளிகள் உள்ளன. அவை சாத்-தர்ஷணா எனப்படும்.
- அவை பழங்காலத்திலிருந்து 6 தத்துவ ஞானிகளைக் கொண்டது.
- நியாயா (ஆராய்பவர்) தர்ஷணா – கௌதமா
- வைஷக்ஷா தர்ஷணா

ரிஷி (அணுவை கண் / அணு எனக் கூறியவர்)

- கன்க்ஷா தர்ஷணா – கபிலர்
- யோகா தர்ஷணா – பதஞ்சலி
- பூர்வ மிமாம்ஷா தர்ஷணா – ஜாய்மினி
- உத்ரமீமான்ஷா தர்ஷணா – பாதர்யானா (அ) வியாஷர் (மஹா வேதாந்த தத்துவங்களைக் கொடுத்தது)

- மனு என்பவர் ஸ்மிருதிகளை எழுதினார்.
- வேதம் என்ற சொல்லுக்கு அறிவு என்று பொருள்.
- சபா, நமிதி என்ற இரு அவைகள் மன்னருக்கு உதவி செய்தது.
- சபாவின் தலைவர் சபாபதி. சுபாவில் செலவந்தர்கள், புரோகிதர்கள் காணப்பட்டனர்.
- சமிதி – பொதுமக்கள் பிரதிநிதிகள் காணப்பட்டனர்.
- விதாதா என்ற சபை போர் செயல்களை கவனித்தது.
- பிரதம மந்திரி – பிரதானா
- கருவூல மந்திரி – சுமத்ரா
- வருவாய் துறை மந்திரி – ஆமேத்தியார்
- சோம் பானம், சுரா பானம் அருந்தினர்.

காப்பிய காலங்கள்

- மகாபாரதம், இராமாயணம் போன்றவை உருவாயிற்று. பகவத்கீதை எழுதப்பட்டது.
- உலகத்தின் மிகப்பெரிய காப்பியம் மகாபாரதம் ஆகும். இதனை எழுதியவர் வேதவியாசர்.
- இராமாயணத்தை எழுதியவர் வால்மீகி முனிவர். இராமாயணத்தில் இலட்சுமணன் மனைவியின் பெயர் ஊர்மிளா.
- சூத்திர வகுப்பினர் மேல் ஜாதி பெண்களை திருமணம் செய்வது பிரத்திலோமா என்று தடை செய்யப்பட்டது.
- மேல் ஜாதி ஆண்கள் தாழ்ந்த குல பெண்களை திருமணம் செய்தல் அநுலோமா என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- **தென்னிந்தாயவிற்கு வந்த முதல் ஆரியர் அகத்தியர்.**
- திருமணம் எட்டு வகைப்படுத்தப்பட்டது.
- வாழ்க்கையில் நாற்பது சடங்குகள் செய்ய வலியுறுத்தப்பட்டது.
- நியோகா – விதவைப் பெண் தன் கணவனின் தம்பியுடன் ஆண் குழந்தை பெறும் வரை வசிப்பது.
- பிரஜாபத்தியம் - சாதாரணமாக திருமணம் செய்தல்.
- தெய்வம் - வேள்வி நடத்தும் பொழுது அந்தணருக்கு மகளை வழங்குதல்.
- பிரம்மம் - சீதனத்துடன் தன் மகளை தன் குலத்தில் மணம்.
- அர்ஷம் - பசுக்களை பெற்றுக் கொண்டு மணம்.
- காந்தர்வம் - சுயம்வரம் (அ) காதல் மணம்.
- பைசாசம் - பலாத்கார மணம்.
- ராட்சசம் - பெண்களை கடத்திக் கொண்டு திருமணம் செய்தல்.

வர்ணங்கள் - சாதிகள்

- ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இந்தியாவில் நான்கு வகுப்புகள் இருந்ததாக Zend Avesta என்ற ஈரானிய நூல் குறிப்பிடுவது.

  அந்த நான்கு வகுப்பினர்கள் பின்வருமாறு:

1. புரோகிதர் 2. போர்வீரர் 3. குடியானவர் 4. கைவினைஞர்

- இந்த நான்கு வர்ணங்களும் வேதகால வர்ணங்களும் வெவ்வேறானவை.
- இருக்கு வேதத்தில் 10வது மண்டலத்தில் உள்ள புருஷசூக்தம் என்ற பகுதி வேதகால வர்ணத்தை பற்றி குறிப்பிடுகிறது அதன்படி வர்ணம் என்ற சொல் ஆரிய நிறத்தைக் குறிக்கின்றது.
- தாஸ்யவர்ணம் என்ற சொல் தாசர்கள், தாஸ்யூக்கள், என்றும் குறிப்பிடப்படுகிறது.
- இருக்கு வேத காலத்தில் தோன்றிய நால்வகை வர்ணங்கள்.
- யஜுர் வேத காலத்துக்குள் நன்கு வளர்ச்சியடைந்தது.
- ரிக் வேதத்தின் 10வது மண்டலம் பிற்சேர்க்கை என்பது குறிப்பிடத்தக்கது.
- தாஸ்யூக்களிடம் போர் புரிந்தவர்கள் இராஜன்யர் என்றும் போரில் தோல்வியடைந்த தாஸ்யூக்கள் (அடிமைகள்) சூத்திரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- விவசாய தொழிலை மேற்கொண்ட 'விஸ்' என்று அழைக்கப்பட்டவர்கள் வைசியர்கள் என்னும் இவர்களுக்கு மந்திரங்களை ஓதி யாகங்களை நடத்தியவர்கள் பிராமணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- Hitopadesha (Hita + Upadesha. = Counsel or advice with widom. Hitopadesha என்ற நூலை எழுதியவர் **நாராயண பண்டிட் ஆவார்**
- இந்நூல் பஞ்ச தந்திர கதைகளுக்கு மூல காரணமாக விளங்கியது.
- பஞ்ச தந்திரக் கதைகளை (200 B.C) எழுதியவர் விஷ்ணு சர்மா ஆவார்.
- கி.மு. ஆறாம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளில் சமய அமையின்மை காணப்பட்டதால் சீனாவில் கன்.்பூசியாக, பாரசீகத்தில் பார்சி மதத்தை தோற்றுவித்த ஜொராஸ்டரர், இந்தியாவில் மகாவீரர், புத்தர் ஆகியோர் சமகாலத்தில் வாழ்ந்தனர்.
- **புத்த சமயம் 563 கி.மு.**
- 567 கி.மு. என்றும் கூறுவர்.
- புத்த மதத்தை நிறுவியர் - புத்தர்
- புத்தர் என்னும் சொல்லுக்கு ஞானஒளி பெற்றவர் என்று பெயர்.
- இயற்பெயர் - சித்தார்த்தர்
- தந்தை – கபிலவஸ்து நாட்டின் மன்னர் சுத்தோதனர். தாய் - மாயாதேவி
- இனம் - சாக்கியர் வம்சம் - சத்ரியர் காலம் 487
- வளர்ப்புத்தாய் - கௌதமி (மாயாவின் தங்கை)
- பிறந்த இடம் - லும்பினி வனம்
- மனைவி – யசோதை, மகன் - இராகுலன்
- ஞான ஒளி கிடைத்த இடம் - கயை (பீகார்)
- முதன் உபதேசம் செய்த இடம் - சாரநாத் (மான் பூங்கா)
- இயற்கை எய்திய இடம் - குசி, வயது: 80
- வேறு பெயர்: சாக்கிய முனி : ஆசிய ஒளிவிளக்கு
- துறவு மேற்கொள்ளப்பட்ட போது வயது : 29
- ஞானம் பெற்ற போது வயது : 35
- முதல் உபதேசம் பெற்றவர்கள்: 5 பிராமணர்கள்

புத்த சமய கருத்துகள் கூறுவது – திரிபீடகம்

திரிபீடகங்கள் (மூன்று கூடைகள்)

1. விநய பீடகம் - ஒழுக்கம்
2. சுத்த பீடகம் - தூய்மை
3. அபிதம்ம பீகடம்-அறநெறி கருத்துக்கள்

விநய பீடகம்: 2 பிரிவுகளை உடையது

1. விநய பீடகம்
   - விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உடையது.
   - சங்கங்களின் வளர்ச்சி பற்றியது
2. பாதி மோட்சம்
   - புத்தரின் வாழ்க்கை பற்றியது

சுத்த பீடகம்:

- இது பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது.
- 5 பிரிவுகளை கொண்டது.
- பல இடங்களில் புத்தர் வழங்கிய உபதேசங்கள் மற்றும் உரைகள் பற்றியது.
- சாரிபுத்தா, ஆனந்தா ஆகியோர் தொகுத்தனர்.

1. தீக நிகாயம்: 34 சூத்திரங்களை உடையது. சூத்திரம் மகாபரிநிகாயா – புத்தரின் வாழ்க்கையின் கடைசி கால கட்டத்தை விளக்குவது.
2. சம்யுக்த நிகாயம் : 56 சூத்திரங்கள்
3. அங்குத்தர நிகாயம்: 11 பிரிவுகள்
4. மத்திம நிகாயம்: 152 சூத்திரங்கள்
5. குட்ட நிகாயம்: இலக்கியங்கள்

அபிதம்ம பீடகம்:

இது புத்த சமய இலக்கியங்கள் மற்றும் புத்தரின் முந்தைய பிறப்புகளில் நடைபெற்ற கனவுகள் (ஜாதகக் கதைகள்) பற்றியது. இது பாலி மொழியில் எழுதப்பட்டது.

ஏழு பிரிவுகளை உடையது.

1. தர்மசங்கணி 2. விபங்கம் 3. கதவத்து 4. பண்ணத்தி 5. தாதுகதை 6. யமகம் 7. பட்டானம்

முதல் 5 சீடர்கள்: 1. சொண்டன்னா 2. மகானாமா 3. வப்பா 4. பத்திஜி 5. அஸ்ஸாஜி

முக்கிய சீடர்கள்:

1. ஆனந்தா 2. உபாலி 3. மகா கஸ்ஸபா 4. அனுருத்தா

முக்கிய பல்கலைக் கழகங்கள்:

(கால வரிசைப்படி)

1. தட்சசீல பல்கலைக்கழகம்
2. நாகர்ஜுனா பல்கலைக்கழகம்
3. நாளந்தா பல்கலைக்கழகம்
4. வாதாபி பல்கலைக்கழகம்
5. விக்ரம் சீல பல்கலைக்கழகம்

முக்கிய நூல்கள்

திரிபீடங்கள் - மிலிண்டபாணா

மசனவிபஷா - சூத்திர அலங்காரம்

மகாயாணம் பள்ளிகள்:

1. மத்தியமிகா 2. யோகசாரா

ஹீனயாணப் பள்ளிகள்:

1. **வைபாஷிகா**

புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவது ஜாதகக் கதைகள்.

புத்த மாநாடுகள்:

முதல் புத்த மாநாடு:

- புத்தர் இறந்த சில வாரங்களில் நடைபெற்றது.
- 487 அல்லது 483 கி. மு.வில் ராசகிருகம் என்ற இடத்தில் சட்டபாணி என்ற குகையில் நடைபெற்றது.

- பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த 500 புத்த மத குருக்கள் கலந்துக் கொண்டார்கள்.
- புத்தரின் உபதேசங்கள் விநய பீடகம் மற்றும் தம்ம பீடகம் என்ற இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.
- விநய பீடகத்தை தொகுத்தவர்: ஆனந்தா (Ananda)
- இம்மாநாட்டை தலைமை ஏற்று நடத்தியவர் மகாகஸ்பா (Mahakasspa)

இரண்டாவது புத்த மாநாடு:

- சுமார் கி.மு. 387 அல்லது 383ல் வைசாலி என்ற இடத்தில் நடைபெற்றது.
- ஐவசாலியில் வாழ்ந்த புத்த பிக்குகள் விநய பீடகத்தில் இருந்து மாறுபட்டனர்.
- பழைமைவாதி பிக்குகள்: ஸ்தவீர் (Sthaviras) என்றும் சீர்திருத்தவாதிகள் மகாசமிகா (Mahasamhikas) என்றும் அழைக்கப்பட்டார்கள்.

மூன்றாவது புத்த மாநாடு:

- சுமார் கி.மு. 250ல் பாடலிபுத்திரத்தில் அசோகர் காலத்தில் நடைபெற்றது.
- இம்மாநாட்டை தலைமை ஏற்று நடத்தியவர் மொகாலி புத்த திசா
- இம்மாநாட்டில் அபிதம்ம பீடகம் என்ற மூன்றவாது பீடகம் உருவாக்கப்பட்டது

நான்காவது புத்த மாநாடு:

- கனிஷ்கர் காலத்தில் காஷ்மீரம் (அ) ஜலந்தரில் நடைபெற்றது
- வாசுமித்ரா மற்றும் அசுவகோஷ் (horses that listen to Bodhisattva) ஆகியோர் தலைமை ஏற்றார்கள்.
- மூன்று பீடகங்களுக்கு விளக்க உரையாக விபஷாக்கள் இயற்றப்பட்டது
- 5வது மற்றும் 6வது மாநாடு: ஹர்ஷர் காலத்தில் கன்னோசி மற்றும் அலகாபாத்தில் நடைபெற்றது

மூன்று கொள்கைகள்:

1. புத்தம் 2. தர்மம் 3. சங்கம்

புத்த சமயக் கொள்கைகள்

1. மனித வாழ்க்கை துன்பம் நிறைந்தது
2. துன்பத்திற்கு காரணம் ஆசை
3. துன்பத்தினை நீக்க ஆசையை ஒழிக்க வேண்டும்.
4. ஆசையை அடக்க 8 வகை பாதை

எண்வழிப் பாதை

1. நன்னம்பிக்கை – சம்யக் திருஷ்டி
2. நல்லெண்ணம் - சம்யக் சங்கல்பம்
3. நல்வாக்கு – சம்யக் வாக்கு
4. நற்செயல் - சம்யக் கர்மம்
5. நல்வாழ்வு – சம்யக் அஜுவம்
6. நன்முயற்சி – சம்யக் வியாயாமம்
7. நற்சிந்தனை – சம்யக் ஸ்மிருதி
8. நற்றியானம் - சம்யக் சமாதி

- அவர் முதலில் குறிப்பிட்டது தர்ம சக்கர பரிவாத்த்தனே என்ற வாசகம் ஆகும்
- கர்மா உண்டு
- முதல் குரு: ஆராதகலாமா
- நான்கு உண்மைகள் (அல்லது) ஆரிய சத்தியங்கள். (துக்கா, சமுதாய, நிரோலா, மார்க்கா)
- புத்த மத நூல்கள் பாலி மொழியில் ஏழுதப்பட்டவை

- மகாவசம்சம், தீப வம்சம் ஆகியவை இலங்கையில் உள்ள புத்த நூல்கள்
- புத்த மத அறிஞர் நாகர்ஜுனா doctrine of Shunyata கோட்பாட்டை விளக்கியுள்ளார்.

புத்த மத பிரிவுகள்

1. மகாயானம் - புதியவர்கள்
2. ஹினாயானம் - பழைமைவாதிகள்

நிர்வாணத்தை – அடைய புத்தர் கூறிய மூன்று வழிகள்:

- தன்னைத்தானே வருத்திக் கொண்டு தானே நிர்வாணம் அடைதல் (Arhat – yana)
- மற்றவர்களுக்கு உதவி செய்து தன்னை வருத்தி நிர்வாணம் அடைதல் (Pratyaka)
- மற்றவர்களுக்கு உதவி செய்து, பிறருக்காக வாழ்ந்து தன்னை வருத்தி நிர்வாணம் அடைதல் (Buddha Yana)

மகாயானம்	ஹீனயானம்
சமஸ்கிருத மொழி	பாலி மொழி
புத்தரின் உருவ வழிவாடு, சிலை	திருவடிகள் பாதிமர மற்றும் போதி சத்துவ சிலைகள் வழிபாடு
புத்தர் கடவுள்	புத்தர் மதத்தலைவர்
இந்தியா, சீனா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகள்	ஜப்பான், தென் கிழக்கு ஆசிய நாடு

புத்தமதத்தைப் பின்பற்றுபவர்கள் போதிச் சத்துவர்கள் எனப்பட்டார்கள்

- உலகம் எங்கும் பரவியுள்ளது மகாயானம்
- மகாயானத்தை வளர்த்தவர் : கனிஷ்கர்
- ஹீனயானத்தை வளர்த்தவர்: அசோகர்
- புத்தர் இறக்கும் போது மகத மன்னர் அஜாதசத்துரு.

புத்த சரிதம்:

அஸ்வகோஷர் என்பவரால் இந்நூல் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது

சமணர்கள் - ஜீனர்கள்

- சுமணர்கள் என்றால் சென்றவர்கள் என்பது பொருள்

சுமண மதத்தில் மொத்தம் 24 தீர்ததங்கரர்கள் இருந்தனர். அவர்களின் விவரம் பின்வருமாறு:

- முதலாவது தீர்த்தங்கரர் ரிஷிப தேவர்
- இவர் பரதன் எனப்படும் (இந்தியாவின் முதல் மன்னர்) மன்னரின் தந்தை என்று கூறுவர் இவரைப்பற்றிய குறிப்புகள் விஷ்ணுபுராணம் மற்றும் பாகவதர் புராணத்தில் காணப்படுகிறது.
- ஆஜிதா
- சாம்பவா
- அபிநந்தனா
- சாந்தி
- 22வது தீர்த்தங்கரர் - அரிஷ்டநேமி
- 23வது தீர்த்தங்கரர் - பர்சவ நாதர்
- 24வது தீர்த்தங்கரர் - மகாவீரர்
- தீர்த்தங்கரர் என்ற சொல்லுக்கு வாழ்க்கை என்னும் பிறவிப் பெருங்கடலை கடப்பதற்கு பாதை அமைத்தவர் என்று பொருள்

பார்சவநாதர்:

- தந்தை - அசுவசேனர்
- தாய் - வாமதேவி
- மனைவி - பிரபாவதி
- வம்சம் - நாக வம்சம்
- மரணம் அடைந்த இடம் - மவுண்ட் சுமந்தா
- ஆதார நூல் - கல்பகூத்திரம்

- இவரை பின்பற்றியவர்கள் சுவேதாம்பரர்கள் எனப்பட்டனர். இவர்கள் இரண்டு வெள்ளையாடை அணிந்து இருந்தனர்

பர்வசநாதரின் கொள்கைகள்:

- தீங்கு செய்யாது இருத்தல் (அகிம்சா)
- உண்மை பேசுதல் (சத்தியா)
- பற்றற்று இருத்தல் (அபரிகிருஹா)
- திருடாது விலகி இருத்தல் (அய்தய)
- இவற்றுடன் மகாவீர் தனது கொள்கையாக பிரம்மசர்யத்தை சேர்த்துக் கொண்டார்

மகாவீரர்

- மகாவீரரின் தந்தை – சித்தார்த்தா, குந்தபுரத் தலைவர்
- இயற்பெயர் - வர்த்தமானர்
- தாய் - திரிசலை வைசாலி அருகில் குந்த கிராமம்
- பிறந்த ஆண்டு – கி. மு. 539
- மனைவி – யசோதா
- மகள் பெயர் - அனோஜா
- சகோதரர் நந்தி வர்த்தநனார்
- ஞானம் பெற்ற இடம் - ரிஜீபாலிகா
- உயிர்நீத்த இடம் - பாவா
- கோசாலர் என்னும் துறவியுடன் முதலில் இருந்தார். பின் மகாவீரர் தனியே பிரிந்து சென்றார். கோசாலர் ஆஜீவகர் (யுதஎைமைய) என்ற சமயப்பிரிவை உருவாக்கினர்.
- மகாவீரர் ஜிரும்பிகா கிராமத்தில் உள்ள ரிஜீபாலிகா நதிக்கரையில் ஒரு பழைய கோவில் அருகில் உள்ள சால்மரத்தடியில் கேவலஞானம் (Kevala Jnana) பெற்றார்.
- இவருக்கு வழங்கிய பிற பெயர்கள் :
  1. கைவல்யர் 2. மகாவீரார் 3. ஜைனர் 4. நிர்க்கிரந்தர்
- சமண முனிகள் நேமசந்திரன் கணக்குப்படி மகாவீரர் கி. மு. 468ல் இறந்தார்.
- இவர் பிரம்மச்சரியத்தை போதித்தார்.

கொள்கைகள்:

- கடவுள் இல்லை
- உலகம் தாமாகவே இயங்கி வருகிறது.
- கர்ம கோட்பாடு உண்டு
- எல்லா பொருள்களுக்கும் உயிர் மற்றும் ஆன்மா உண்டு
- அநோகாந்தவாத (Many – sidedness of reality) கோட்பாட்டினை விவாதிப்பது சமண மதம் ஆகும்.
- தீவிர அகிம்சை கொள்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- அங்காக்கள் உருவாக்கப்பட்டது
- 11 சங்கங்கள் அமைக்கப்பட்டது
- சங்கத் தலைவர்கள் கணதாரர்கள் எனப்பட்டனர்
- கோடிய பஞ்சத்தால் பத்திராகு தலைமையில் (திகம்பரர்கள்) சந்திர குப்த மௌரியர் மற்றும் பல சமண துறவிகள் தெற்கில் உள்ள மைசூர் சிரவணபெலகோலா என்னுமிடத்திற்கு சென்றார்
- அங்கு சந்திர குப்தர் உயிர் நீத்தார்
- பஞ்சம் நீங்கியதும் சமணர்கள் வடக்கு திரும்பினர்
- இவர்களை வடக்கு சமணர்கள் (சுவேதாம்பரர்கள்) ஏற்றுக் கொள்ளவில்லை

- வடக்கு சமணர்களின் தலைவர்: ஸ்தூல பத்திரர்
- இம்மதத்தை ஆதரித்தவர்கள்: அஜர்தசத்ரு, காரவேலன், பல்லவர்கள், சாளுக்கியர்கள், கங்கர்கள், ராஷ்டிர கூடர்கள்
- சமண மதத்தை பின்பற்றிய பல்லவமன்னன் முதலாம் மகேந்திரன்

முதலாவது சமண மாநாடு: கி. பி. 3ஆம் நூற்றாண்டு

- பாடலிபுத்திரத்தில் நடைபெற்றது
- தலைமை: ஸ்தூலபத்திரர்
- இங்கு 14 பூர்வாக்களுக்கு பதில் 12 அங்காக்கள் உருவாக்கப்பட்டது.

இரண்டாவது சமண மாநாடு: கி. பி. 5ஆம் நூற்றாண்டு

- வல்லபி நகரில் நடைபெற்றது
- இதற்கு தலைமை ஏற்றவர்: கஷ்மஸ்மணா
- சமண கருத்துக்கள் பரப்பப்பட்ட மொழி: அர்த்தமகந்தி
- சமணர்களின் கோவில்களை அழித்து: அலாவுதீன் கில்ஜி

மூன்று இரத்தினங்கள்:

1. நன்னடத்தை (Samyak Charitra)
2. நம்பிக்கை (Samyak Darshan)
3. நல்லறிவு (Samyak dnayan)

- நல்லறிவு 5 வகைப்படும். அவை:

1. மதி 2. ஸ்ருதி 3. ஆவதி 4. மானாபிரேயே
5. கேவல்

- மூன்று இரத்தினங்களை கடைபிடிப்பதால் 'சித்திசீல' என்ற நிலை உண்டாகும்.

முக்கிய பிரிவுகள்

1. திகம்பரர்கள் ஆகாயத்தை உடையாக அணிந்தவர்கள் நிர்வாண சமணர்கள்
2. சுவேதம்பரர்கள் வெள்ளை உடை அணிந்தவர்கள்

- சமணர்களின் நூல்களில் தொகுப்பிற்கு ஆக **சித்தாந்தங்கள்** என்று பெயர். இதனை 14 பூர்வாங்கள் என்பர்.
- இதனை தொகுத்தவர்: பத்திரபாகு
- நிபந்தனைகளுடன் கூடிய தற்கொலை ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சமணக் கோயில்கள் உள்ள இடங்கள்:

1. மவுண்ட் அபு 2. எல்லோரா 3. ஊதயகிரி 4. சிரவணபெலகோலா

- இராஜஸ்தானில் உள்ள மவுண்ட அபு அலையில் உள்ள தில்வாரா, கஜீராஹோ, சித்தூர், ரானக்பூர், ஆகிய இடங்களில் உள்ள கோவில்கள், உதயகிரி, ஹதிகும்பா, எல்லோரா மற்றும் கிர்னாவில் உள்ள சிற்பங்கள், கர்நாடகத்தில் மைசூருக்கு அருகே உள்ள சிரவணபெலகோலா என்னும் இடத்தில் உள்ள கோமதீஸ்வரர் சிலை போன்றவை சமணர்களின் கலை திறனுக்கு எடுத்துக்காட்டு ஆகும்.
- மொகாலிபுத்ரா (கோசலர்) என்பவரால் துவக்கப்பட்டது.
- புத்த மதம் மற்றும் சமண மதத்தை போன்றே இம்மதமும் ஏற்பட்டது.
- அசோகரின் கற்பாறைகளில் இது குறித்த குறிப்புகள் காணப்படுகிறது
- பராபர் குகைகள் ஆஜிவகா மதத்திற்காக அசோகரால் ஒதுக்கப்பட்டது.

- முழு நிர்வாணத்தையும், கடுமையான ஒழுக்கத்தையும் இம்மதம் போதித்தது.

அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்பு:

- அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்பு குறித்து இந்தியச் சான்றுகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.
- அலெக்சாண்டர் மாசிடோனியா நாட்டு மன்னன் இரண்டாம் பிலிப் என்பவரின் மகன்
- இவரின் ஆசிரியர்: தத்துவஞானி அரிஸ்டாட்டில்.
- இவரின் ஆசை: உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆள வேண்டும்
- இந்தியாவை கிழக்கு மாசிடோனியா என அலெக்சாண்டர் நினைத்திருந்தார்

முதலாம் சைரஸ்

- பாரசீகத்தில் அகமேனிய வம்ச ஆட்சியை நிறுவியவர்
- கி. மு. 558-530ல் இந்தியா மீது படையெடுக்க முயற்சி செய்தார். பாக்டிரியா, காந்தாரம் ஆகிய பகுதிகளை வென்றார்.

முதலாம் டோரிசு கி. மு. 522-486

- பாரசீகத்தின் மூன்றாவது அரசர்.
- சிந்து மாநிலத்தை வென்று பாரசீகத்துடன் இணைத்தவர்.

அரிபெல்லா போர்: கி. மு. 330

- மூன்றாம் டோரிசு காலத்தில் பாரசீக நாட்டின் மீது அலெக்சாண்டர் போர் தொடுத்தார்.
- மூன்றாம் டோரிசு கொல்லப்பட்டார்.
- அலெக்சாண்டர் இந்தியாவிற்குள் நுழைந்தார்.
- அலெக்சாண்டர் சரணடைந்த முதல் மன்னன் தட்சசீலத்தை ஆண்டு வந்த அம்பி ஆவார்.
- அலெக்சாண்டர் சிந்து நதியை கடக்க உதவி செய்தவர்.
- அலெக்சாண்டருக்கு சரணடைய மறுத்தவர் போரஸ் என்ற புருஷோத்தமன். இவர் ஆண்ட பகுதி ஜீலத்திற்கும் சீனாப்பிற்கும் இடையே உள்ள பகுதி
- போரஸ் மன்னன் தன்னை போர்க கைதியாக நடத்தாமல் மன்னனாக நட்ட விருப்பம் தெரிவித்தார்.
- போரஸ் மன்னனை மதித்து அலெக்சாண்டர் அவர் நாட்டினை திருப்பி அளித்தார்.
- அலெக்சாண்டர் இறந்த ஆண்டு கி. மு. 323
- இறந்த இடம் பாபிலோன்
- அலெக்சாண்டர் படையெடுப்பு பற்றி அறிய உதவுவது அவரின் நண்பர் நியார்ச என்பவரின் குறிப்புகள் ஆகும்
- பியாசு நதிக்கரையில் 12 பலிப்பீடங்களை நிறுவினார்.
- அலெக்சாண்டரின் படையெடுப்புகள் விளைவாக பாக்டிரியா, பார்தியா போன்ற கிரேக்க குடியேற்றங்கள் ஏற்பட்டன
- கிரேக்க–பாக்டிரிய சிற்பிகள் காந்தாரத்திற்கு வந்தனர். அவர்கள் கனிஷ்கர், புத்தர், போதிசத்துவர் சிலைகளை செய்தனர். காந்தாரக்கலை எனப்படும் இந்தோ–கிரேக்க (பாரசீக) கலை உருவாயிற்று
- இந்தியாவில் வானவியல், கலை, நாணயமுறை தோன்றியது.

மகாஜனபதாக்கள்:

- புத்தரது காலத்தில் அதாவது 6-ம் நூற்றாண்டில் இந்தியாவில் பல்வேறு நிலம் சார்ந்த அரசுகள் தோன்றின.

அரசியல் ரீதியில் இது ஒரு முக்கியமான திருப்புமனை ஆகும். நிலம் சார்ந்த அரசுகள் உருவானது முதன் முதலாக கி. மு. 6-ம் நூற்றாண்டில் ஆகும்.

- புத்த சமயத்தைச் சார்ந்த அங்குதார நிக்காயா நூல், ஜாதக இலக்கியங்கள் மற்றும் சமண நூலாகிய பகவதி சூத்திரம் ஆகியவை அடிப்டையில் ரைஸ் டேவிஸ் என்ற ஆங்கிலேயே வரலாற்று ஆசிரியர் கி.மு. 6-ம் நூற்றாண்டில் 16 நிலம் சார்ந்த நாடுகள் இருந்ததாக கூறுகிறார். இந்த நிலம் சார்நத நாடுகள் சொலச மகாஜனபதாக்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- இந்நிலப் பரப்புகள் காபூல் பள்ளத்தாக்கில் இருந்து கோதாவரி நதிக்கரை வரை பரவியிருந்தது. இவை

சுதேச அரசுகள்	தலை நகரங்கள்
காசி	வாரணாசி
..காசலம்	..ரவஸ்தி (அயோத்தி)
..ங்கம்	..ம்பணகிரி
..கதம்	..ரிவ்ராஜ்/ராஜகிருதம்
..ஜ்ஜி	..வசாலம் (மிதிலை)
..ல்லா	..சி நகரம் மற்றும் பாவபுரி
..சடி	..க்திமதி
..ாட்சா (வம்சா)	..காசாம்பி
...ரு	ஹஸ்தினாபுர், இந்திர பிருஸ்தம் மற்றும் ...சுகாரா
..ஞ்சாலம்	..ஹிசட்ரியா மற்றும் கம்பில்யா
..ாட்ஸ்யா	..ரட்நகர்
..ரசென்	மதுரா
...சாகா	..பளடான்யா
..வந்தி	உஜ்ஜயினி
...ாந்தாரா	தட்ஷசீலம்
..ாம்பேஜ்	..கபூர் (துவாரகா)

1. அங்கா இது பிம்பிசாரர் காலத்தில் மகதத்துடன் இணைக்கப்பட்டது. இது தற்போதுள்ள கிழக்கு பீகார் பகுதியாகும்.
2. முகதா – பிருகரதா என்பவர் இதனை தோற்றுவித்தவர் ஆவார். நான்கு நாடுகள் சேர்ந்ததால் இது முதன்மை பெற்றது. இது தற்போதுள்ள பாட்னா, கயா பகுதிகள் அடங்கிய தெற்கு பீகார் பகுதியாகும்.
3. வாஜி – லிச்சாவி, வித்தேகர்கள் போன்ற 8 கலத்தவர் இதனை நிறுவினர்.
4. மல்லா - இது ஒரு பிரிவாக பிரிக்கப்பட்டது
5. காசி – வருண் மற்றும் அசி என்ற இருநதிகள் ஓடுகிறது. பல போர்களுக்கு பிறகு கோசலாத்துட்ன இணைந்தது.
6. கோசலா – பல போர்கள் மற்றும் திருமண உறவின் அடிப்படையில் மகதத்துடன் இணைந்தது. இது உ. பி. மாநிலத்தின் அவத் பகுதியாகும்.
7. வச்சா - இது தற்போது உள்ள அலகாபாத் பகுதியாகும்.
8. சேடி – பண்டல்கண்ட பகுதியே செடி நாடாகும்.
9. குரு – டெல்லி, மீரட், தானேஸ்வரம் பகுதியே குரு நாடாகும். இதன் தலைநகரம் அஸ்தினாபூர் (இந்திர பிரஸ்தா) ஆகும்.
10. பாஞ்சாலா – பரோலி, பதாவூதன், ரோகில்கண்ட் பகுதியே பாஞ்சாலா ஆகும்.
11. சூரசேனா – மதுராபுரி பகுதியே சூரசேனா நாடாகும்.

12. மத்சயா – ஜெய்பூரை சுற்றி உள்ள பகுதி
13. அவந்தி – சாம்பல் மற்றும் மாளவ பகுதியாகும்.
14. மஸ்வமா - இது கோதாவரி சமவெளியின் மேற்குபுரம் இதன் தலைநகரம் Patlia
15. காந்தாரம் - இது பேஷாவர் மற்றும் இராவல்பிண்டி பகுதியாகும்.
16. காம்போஜம் - இது காஷ்மீர் பகுதியாகும். இந்த 16 மகாஜனபதாக்கள் மற்றும் குடியரசு நாடுகள் பிற்காலத்தில் 4 பெரிய அரசாக உருவாகியது. அவை 1. அவந்தி 2. கோசலம் 3. வத்சயா 4. மகதம்

குடியரசுகள்

- கங்கை கரையில் பேரரசுகள் தோன்றின. ஆனால் அதே நேரத்தில் பஞ்சாப், பங்கைக்கரையின் வெளிப்புற இடங்களிலும் மற்றும் இமயமலை அடிவாரங்களிலும் ஜனா என்று சொல்லப்படும் குடியரசுகள் தோன்றின.
- புத்த மற்றும் சமண இலக்கியங்களில் காணப்படும் முக்கிய குடியரசுகள்

நாடு	பழங்குடிகள்
1. கபிலவஸ்து	சாக்கியர்கள்
2. வைசாலி	லிச்சாவிகள்
3. மல்லாக்கள்	பாவா
4. குசி நகரம்	மல்லாக்கள்
5. மிதிலை	விதேகர்கள்
6. தைசாலி	ஞாத்திரிகர்கள்
7. அல்லகப்பா	புல்லியர்கள்
8. கேசபுட்டா	கலம்பர்கள்
9. பிப்பாலி வனம்	மோரிகள்
10. சம்சுமாரா	பர்கர்கள்

- அர்த்த சாஸ்திரத்தில் மேலும் பல குடியரசுகளின் பெயர்கள் காணப்பட்டது. இக்குடியரசுகள் காலப்போக்கில் வலிமை பொருந்திய அண்டை நாடுகளுடன் போர்கள் மூலம் இணைக்கப்பெற்றது.
- மேற்கூறிய நாடுகளில் மகதம் வலிமைபெற்ற நாடாக விளங்கியது.
- அதனை ஆண்ட ஆர்யங்க மரபு மன்னர்கள் பிம்பிசாரர் மற்றும் அஜாதசத்ரு காலங்களில் மகதம் வலிமை மிக்க நாடாக விளங்கியது

கில்டுகள்

- அரசாங்கத்தைப் போலவே விலைவாசியையும் பொருட்களின் தரத்தையும் கட்டுப்படுத்துவதற்காக இருந்த அமைப்பே வியாபரிகளின் சங்கம் எனப்படும் கில்டு ஆகும்.

பிம்பிசாரர்

- இவர் அர்யங்க மரபின் முதல் மன்னர், இம் மரபே பின் சிசுநாத வம்சமாக மாறியது.
- இவர் இராஜகிருஹா என்ற தலை நகரை உருவாக்கினார்.
- பிம்பிசாரர் தலைநகரை கிரிவிராஜா என்னும் இடத்திலிருந்து ராஜகிரகத்திற்கு மாற்றினார். ருாஜகிருகத்தின் எஞ்சிய சிதைவுகளை பாட்னாவுக்கு அருகே ரெக்கிஸ் என்னும் இடத்தில் காணலாம்.
- மகதத்தின் சிறப்பை ஏற்படுத்திய முதல் அரசர் இவர்
- சமண இலக்கியங்கள் இவரை ஸ்ரேனிகா என்று குறிப்பிடுகின்றன
- மகாவீரரும், கௌதமபுத்தரும் இவரின் உறவினர்கள்.
- புத்தருக்கு விருந்து கொடுத்தார்

- பிரம்ம தத்தாவை வென்று அங்க நாட்டை சேர்த்துக்கொண்டார்.
- கோசல நாட்டு கோசலா தேவியை மணந்து கொண்டு காசியை திருமண பரிசாகப் பெற்றார்.

அஜாத சத்துரு:

- இவர் தனது தந்தையை சிறையில் அடைத்து பின் கொன்று ஆட்சியை கைப்பற்றினார்.
- இவருக்கு எதிராக லிச்சாவிகள், மல்லர்கள், பாலர்கள், சிராவசுதி மன்னர்கள் ஆகியோர் இணைந்தனர். இதுவே விரிஜி கூட்டிணைவு எனப்படும்.
- இவர்கள் அனைவரையும் அஜாத சத்துரு வென்று விரிஜிகள் நாட்டை மகத நாட்டுடன் இணைத்தார்.
- இந்த விரிஜி கூட்டிணைவுகள் பாடலி என்ற கிராமத்தில் கட்டிய கோட்டையே பிற்காலத்தில் பாடலிபுத்திரம் எனப்பட்டது.
- இவர் போரில் இரண்டு புதிய ஆயுதங்களைக் கண்டு பிடித்தார். வை

1. மகாசீலகண்டகா 2. ரதமுசாலா

- இவர் புத்தரை பலமுறை சந்தித்தார்
- இவர் முதல் புத்த சங்கத்தை இராசாகிருகத்தில் கூட்டினார்
- இவர் ராஜகிருகத்தில் ஒரு ஸ்தூபியை கட்டினார்
- இவரது மகன் உதயபத்திரன் கொலை செய்யப்பட்டு சிசுநாகர் ஆட்சியை கைப்பற்றினார்.
- சிசுநாகர் வம்சத்திற்கு பிறகு நந்தவம்சம் ஆட்சிக்கு வந்தது.

நந்த வம்சம் கி.மு. 345 – கி.மு. 362

- புராணங்கள் 9 நந்தர்கள் 100 ஆண்டு காலம் ஆட்சி செய்ததாக குறிப்பிடுகிறது.
- முதல் நந்த அரசன் : மகாபத்ம நந்தன்
- இவர் நாவிதர் என கிரேக்க ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.
- இவர் சத்திரிகளை அழித்தமையால் இரண்டாம் பரசுராமன் என்று அழைக்கப்படுகிறார்.
- இவர் கலிங்க நாட்டை வென்றதை காரவேலரின் அதிகும்பா கல்வெட்டு மூலம் அறியலாம்.
- இவர் மகதத்துடன் இணைத்த பிறநாடுகள்: பாஞ்சாலம், காசி, அசுமகா, மிதிலை, குரு மற்றும் சூரசேனா ஆகும்.
- இந்தியாவின் முதல் முக்கிய பேரரசர் அவர் ஏக்ராட் என்னும் பட்டத்தை சூட்டிக் கொண்டார்.
- நந்த வம்சத்தின் கடைசி அரசர்: தனநந்தர். இவர் அக்ரசேனர் என்று அழைக்கப்பட்டார்.
- இவரிடமிருந்து ஆட்சியை மௌரிய வம்சத்தைச் சார்ந்த சந்திரகுப்த மௌரியர் கைப்பற்றினார்.

மௌரியப் பேரரசு

சான்றுகள்

1. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்
2. மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா
3. விசாகத்தரின் முத்திரா ராட்சசம்
4. இலங்கையின் புத்த சமண நூல்களாக தீபவம்சம், மகாவம்சம்
5. அசோகரின் கல்வெட்டுக்கள்
6. ருத்ரதாமன் என்பவரது கிர்னார் கல்வெட்டு

7. ஆரியன், புளூடார்க், பிளினி, ஜஸ்டின் போன்ற கிரேக்க அறிஞர்களின் படைப்புகள்
8. பிற சான்றுகளான மனுதர்மம், காமசூத்திரம், பஞ்சதந்திரம், கமண்டகம், தண்டியலங்காரம்
9. வாயு புராணம், விஷ்ணு புராணம், மத்யச புராணம்

சந்திரகுப்த மௌரியர் (கி.மு. 321-291)

- இவர் மௌரிய வம்சத்தை நிறுவியவர்.
- இவரது தாய் முரா வம்சத்தை சார்ந்தவர் என்றும், இவர் மயில் வளர்ப்பவரின் மகன் என்றும் கூறப்படுகிறது.
- செல்யூகஸ் நிகேடருடன் போர் - போரில் வெற்றி. செல்யூகஸ் தனது மகள் ஹெலனை சந்திரகுப்த மௌரியருக்கு திருமணம் செய்து வைத்தார். சந்திரகுப்தர் நினைவாக கட்டப்பட்ட பழைமையான கோவில் சந்தராபாஸ்டி
- செல்யூகஸ் தூதுவர் மெகஸ்தனீஸ்
- மெகஸ்தனீஸ் எழுதிய நூல் இண்டிகா
- இண்டிகா நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை. கிரேக்க இலத்தீன் ஆசிரியர்களான ஸ்ட்ராபோ, அர்ரியன், பிளின் ஆகியோர் இணடிகாவிலிருந்து மேற் கோள்களாக காட்டியுள்ள சிறுசிறு பகுதிகள் நமக்கு கிடைத்துள்ளன.
- சந்திரகுப்த மௌரியர் அரச பதவியை துறந்து சமண மதத்தை தழுவி பத்ர பாகு தலைமையில் சிரவண பெலகோலாவில் சென்று கி.மு. 298ல் மரணமடைந்தார். சிரவணபெலகோலாவில் உள்ள கோமதீஸ்வரர் சிலை சாமுண்டியர்களால் கட்டப்பட்டது.
- குஜராத் மாநிலம் கிர்நார் மாவட்டத்தில் புகழ்பெற்ற சுதர்சன ஏரி வெட்டினார்

பிந்து சாரா

- சந்திரகுப்த மௌரியருக்குப்பின் ஆட்சிக்கு வந்தவர். கிரேக்கர்கள் **"அமிர்ததகடா" (எதிரிகளை கொல்பவர்)** என்றனர்.
- மெகஸ்தனீசுக்கு பிறகு "டெய்மேக்கஸ்" "டையோனீசியஸ்" ஆகியவர்கள் கிரேக்க நாட்டின் தூதுவர்கள்

அசோகர் (கி.மு. 273 – 236)

- கி. மு. 273ல் பிந்துசாரர் இறந்திருப்பார் என்று கருதப்படுகிறது
- இதற்கு பின் பதவி ஏற்றவரை அசோகர் என மாஸ்கி கல்வெட்டு குறிப்பிடுகிறது
- அசோகர் காலத்து கல்வெட்டு அவரை தேவானாம்பிய பியதசி என்று கூறுகிறது.
- தேவானாம்பிய என்றால் கடவுளால் நேசிக்கப்படுபவர் என பொருள்படும்
- பியதசி என்றால் கனிந்த பார்வையுடையவர் என பொருள்படும்
- இவருடைய மனைவி தேவி. சிவனை வழிபட்ட இவரை புத்தமதத்திற்கு மாற்றியவர் திசா என்ற உபகுப்தர்
- இந்தியாவை ஆண்ட மிக சிறந்த மன்னர்
- ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 13 ஆண்டுகள் போரில் காலம் கழித்தார்
- கி.மு. 261ஆம் ஆண்டில் தற்போது ஒரிசா எனப்படும் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தார். போரில் 1,50,000 பேர் கைதிகளாகப் பிடிபட்டனர். பல இலட்சம் பேர் உயிர் துறந்தனர்.

- எனவே இனி போரிடுவதில்லை என சபதம் எடுத்துக்கொண்டார்.
- அசோகர் போரிட்ட கலிங்க மன்னனின் பெயர் தெரியவில்லை
- போருக்குப்பின் திக் விஜயம் எனப்படும் சண்டையிடுதலை விட்டு விட்டு தர்ம விஜயம் என்ற அகிம்சையில் செல்ல துவங்கினார்
- அசோகர் மூன்றாவது புத்த மாநாட்டினை பாடலிபுத்திரத்தில் கூட்டினார்
- **கல்ப சூத்ரா என்ற நூலை பத்திர பாகு எழுதியுள்ளார்.**
- அசோகரின் வேறு பெயர்கள்: தேவனாம்பிரியர், பிரியதர்ஷிணி
- இவர் தனது போதனைகளை பரப்ப பாலி மொழியை பயன்படுத்தினர்
- அசோகரின் மகன் மகேந்திரன் மற்றும் மகள் சங்கமித்திரை புத்த மதத்தினை பரப்ப இலங்கை சென்றனர்.
- இவர் புத்த, தர்மா ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு அதன் வழி நடந்ததால் அசோகர் மிகச் சிறந்தவர் எனக் கருதப்படுகிறார்
- அசோகரின் பேரன் தசரதன் ஆவார். இவர் அசோகருக்கு பிறகு கிழக்குபுற மாகாணங்களை ஆட்சி செய்தார்.

அசோகரின் கல்வெட்டுகள் - வகைப்பாடுகள்

14 பாறை ஆணைகள்

- பதிமூன்றாவது பாறை கல்வெட்டு கலிங்க வெற்றியை குறிப்பிடுகிறது
- கிரேக்க நாடுகளுக்கு அசோகர் அனுப்பிய தூதுக்குழுக்களை குறிப்பிடுகிறது
- அசோகரின் நன்னெறி மற்றும் கொள்கைகளை கூறுகிறது

இரு சிறு பாறை ஆணைகள்

- முதல் சிறு பாறைக் கல்வெட்டு அசோகருடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றி கூறுகிறது.
- இரண்டாவது பாறைக் கல்வெட்டு அசோகரின் தர்மகொள்கைகள் பற்றி கூறுகிறது.

இரு கலிங்கா பாறை ஆணைகள்

- இவை பதிநான்கு பாறைக் கல்வெட்டுகளின் இணைப்பாகும்.
- எல்லைப்புறங்களில் உள்ள பழங்குடி மக்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை கூறுகிறது.

பாங்ரு கல்வெட்டு ஆணை:

- புத்த சமயக் கல்வெட்டுகளிலிருந்து ஏழு பகுதிகளை இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகிறது

பராபர் குகைக்கல்வெட்டுக்கள்:

- அசோகரின் பயணங்களை குறிப்பிடுகிறது

7 கற்றூண் ஆணைகள்

சிறு தூண் கல்வெட்டுகள்

- இவை மொத்தம் நான்கு தூண்களாகும்.

1. சுரநாத் 2. சாஞ்சி
3. ரும்மிண்டி 4. அலகாபாத்

- அசோகருடைய பெயரைக் குறிப்பிடும் ஒரே ஒரு கல்வெட்டு ஆணை மஸ்கி கல்வெட்டு ஆணை ஆகும்.

முக்கிய பாறைக் கல்வெட்டு ஆணைகள்

1. ஷாபாஸ் கார்கி – பெஷாவருக்கு அருகில்
2. மான் செஹ்ரா - பெஷாவருக்கு அருகில்
3. கால்சி – உத்திரப்பிரதேசம்
4. கிர்னார் - கத்தியவார்
5. சோபாரா – மும்பைக்கு அருகில்
6. தௌவுலி – ஒரிசா

7. ஜௌகடா – சென்னைக்கு அருகில்
8. பெய்ராத் - ஜெய்ப்பூர்
9. சகஸ்ராம் - வங்காளம்
10. மஸ்கி – ஹைதராபாத் அருகில்

அசோகரின் தூண் கல்வெட்டாணைகள்

1. ரும்மிண்டி – நேபாளம்
2. பாரநாத் - பனாரசு
3. லௌரியா நந்தன கர் - பீகார்
4. தோபரா – அம்பாலா
5. சாந்தி – போபால்

- இக்கல்வெட்டுகள் பெரும்பாலும் பிராமி எழுத்துக்களே

சாணக்கியர்

- இவரின் பூர்வீகம் கேரளா
- இவரின் வேறு பெயர் : கௌடில்யர், விஷ்ணு குப்தர்
- இவர் எழுதிய ஆட்சி நூல்: அர்த்த சாஸ்திரம் இந்த நூல் மௌரியர்களின் அரசியல், (States craft) சமுதாயம், சமயம் மற்றும் பொருளாதாரம் குறித்து அறிய உதவுகிறது. இது சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது.
- விற்பனை வரியை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்
- இவரை இத்தாலியின் மேக்கிவல்லி என்ற அரசியல் சிந்தனையாளருடன் ஒப்பிடுகின்றனர். (மேக்கிவல்லி எழுதிய நூல் பிரின்ஸ்) இவர் சந்திரகுப்தர் மற்றும் பிந்துசாரரிடம் முதன்மை அமைச்சராக பணியாற்றினார்.

விசாகதத்தர்

- இவர் மகாராஜா பாஸ்கரதத்தாவின் மகன் ஆவார்
- இவர் மூன்று நாடகங்களை எழுதியுள்ளார்

1. முத்ரா ராட்சகம் 2. தேவி சந்திரகுப்தம்
3. Abisarika Vancitaka

மௌரியர்களின் நிர்வாகம்

- மௌரியர்கள் தங்களது நிர்வாகத்தை 7 வகையாக பிரித்தனர்

1. மைய அரசு
2. மாகாண அரசு
3. உள்ளாட்சி அரசு
4. நீதித்துறை
5. வருவாய்த்துறை
6. இராணுவத்துறை
7. ஒற்றர் படை

- மௌரிய அரசருக்கு நிருவாகத்தில் உதவி செய்ய மந்திரி பரீஷத் என்ற குழு இருந்தது.
- ஒவ்வொரு கிராமமும் கிராமணி மேற்பார்வையிலும், பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் ஸ்தானிகர் கீழும், நான்கு முதல் பத்து கிராமங்கள் கோபர்கள் கீழும், நகரங்கள் நகரர்கள் கீழும் இருந்து வந்தது.
- மௌரிய அரசு தாயுள்ளத்தோடு நிர்வாகம் செய்த அரசாகும். இதனால்தான் அசோகர் தனது கல்வெட்டுக்களில் அனைத்து மனிதப் பிறவிகளும் தனது குழந்தைகள் என்று கூறுகிறார்.
- முக்கியமான அமைச்சர்கள் மந்திரிகள் எனப்படுவர். இவர்களை பிறர் சச்சிவா (அ) ஆமேத்யா என்று கூறுவர்

- தர்ம மகா மாத்திரர்கள் - மத போதகர், இவர்கள் தர்மத்தை போதிப்பவர்கள்
- பிரதேசிகர்கள் - நிலவரி, கர்வல்
- ராஜீகர்கள் - நிலங்களை அளப்பது
- அந்த மகா மாத்திரர்களை – எல்லைப்புற காவலர்கள்
- மௌரிய வம்சத்தின் கடைசி மன்னன் பிரகதாரா
- மௌரியப் பேரரசும், சுங்க வம்சமும் வீழ்ச்சியுற்ற பின் யவனர்கள், சகர்கள், பகலவர்கள், குஷாணர்கள் ஆகியோர் இந்தியாவை ஆண்டனர்.
- இவர்களுக்கு பாக்டிரியர்களும் பார்த்தியர்களும் இந்திய கிரேக்கர்கள் என்று அழைக்கப்படுகின்றன

சுங்க வம்சம் கி.மு. 186 - 76

- சுங்கர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் காளிதாசரின் மாளவிகாக்னிமித்ரம், பாணரின் ஹர்ஷசரிதம், பதஞ்சலியின் மகா பாஷ்யம் ஆகும்.

மௌரிய வம்சத்தின் கடைசி மன்னர் பிருகரத்தாராவை அவரது அமைச்சர் புஷ்ய மித்ரா கொன்று சுங்க வம்சத்தை நிறுவினார். இவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த பிராமணர்கள் ஆவர்.

- இவர்களின் தலைநகரம் பாடலிபுத்திரம்
- புஷ்ய மித்திரர்: விதர்ப்ப நாட்டுடன் போரிட்டு வெற்றி பெற்று அசுவமேத யாகம் செய்தார். காரவேலரிடம் இருமுறை போரிட்டு தோற்றார்.
- இந்து மதம் தழைத்தது. களிமண்ணால் அசோகர் கட்டிய சாஞ்சி ஸ்தூபியை கருங்கற்கள் கொண்டு புஷ்ய மித்திரர் அமைத்தார். இவருக்குப்பின் இவரது மகன் அக்னிமித்திரர் ஆட்சிக்கு வந்தார்.
- கலை, சமயம் ஆகியவை தழைத்தோங்கியதால் இவர்கள் குப்தர்களின் பொற்கால ஆட்சிக்கு வித்திட்டனர்.
- சுங்கர்கள் கிரேக்க படையெடுப்பை தடுத்து நிறுத்தியது முக்கியமான ஒன்றாகும்.
- சுங்க வம்சத்தின் கடைசி மன்னன் தேவபூட்டி
- இவரை இவரது அமைச்சர் வாசுதேவகண்வா கொன்றார்.

கண்வர்கள் கி.மு.76-31

- வாசுதேவரே கண்வர் வம்சத்தை தோற்றுவித்தவர்கள்

கலிங்க வம்சம்

- கலிங்க வம்சத்தின் மிகச் சிறந்த மன்னன் காரவேலா
- முகதம், சாதவாகனர்கள் மற்றும் தெற்கே கோதாவரிக்கு பிறகும் வெற்றி பெற்றார்.
- காரவேலனின் வெற்றிறயை அறிய உதவும் கல்வெட்டு அதிகும்பா கல்வெட்டு ஆகும்.

சாகர்கள் கி.மு. 20 – கி.பி. 22

- சாகர்களின் முதல் மன்னர் மௌஸ் பர்னஸ்

பார்த்தியர்கள் கி.மு. 20 – கி.பி.22

- குஷாணர்கள் யூச்சி என்ற சீன மரபின் ஒரு கிளை மரபினைச் சார்ந்தவர்கள்
- குயீ ஷாவ்ஸ் என்பதே பின்னர் குஷாண் என்று அழைக்கப்பட்டது
- வடமேற்கில் உள்ள பார்த்தீயர்களை இவர்கள் அப்புறப்படுத்தினர்
- குஷான வம்சத்தின் முதல் அரசர் குஜிலா கசா கட்பீஸஸ் அல்லது முதலாம் கட்பூஸஸ்

- இவர்களின் தலைநகர்: பெஷாவர் எனப்படும் புருஷாபுரம்
- இவர் உரோமானரியர்களுடன் தொடர்பு வைத்திருந்தார்
- இவர் நாணயங்கள் வெளியிட்டார். அவை அகஸ்டஸ், மற்றும் டைபீரியஸ் ஆகியோரின் நாணயங்களை ஒத்திருந்தன.

குஜீலா கட் பீஸஸ்: கி.மு. 15 – கி.பி. 65 வரை

- இவர் முதலாம் கட்பீஸஸ் என்று அழைக்கப்படுவர்
- பார்த்திபர்களை தோற்கடித்து ஜீலம் நதிக்கரை வரை ஆட்சியை அமைத்தார்.

வீமான கட் பீஸஸ்: கி.பி. 64 – 78 வரை

- இவர் முதலாம் கட்பீஸஸ் என்று அழைக்கப்படுவர்
- சீனாவுடன் போரிட்டு தோற்றார். இவர் காலத்தில் சீன மற்றும் உரோமானியர்களுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தார்.
- இவர் காலத்தில் உரோமிலிருந்து ஏராளமான தங்க நாணயம் இந்தியா கொண்டு வரப்பட்டது.
- இவர் கிழக்கில் மதுரா வரை ஆட்சி செய்தார்
- இவர் சைவத்தை சார்ந்தவர். இவரது நாணயங்கள் மீது சிவன், சிவனது எருது மற்றும் சூலம் ஆகியவை காணப்படுகிறது.
- இவரின் பட்டப்பெயர்கள் மகாராஜா, ராஜாதிராஜா, சர்வரோக ஈஸ்வரர், மஹீவாரராஜா

கனிஷ்கர்: கி.பி. 78 – 102 வரை

- குஷான வம்சத்தின் சிறந்த அரசர் முதலாம் கனிஷ்கர்.
- இவர் காஷ்மீரை கைப்பற்றி தனது வெற்றியின் நினைவாக கனிஷ்க புரம் என்ற ஓர் நகரை நிறுவினார்.
- கனிஷ்கர் புத்த சமயத்தை பின்பற்றினார்.
- இவர் 4-வது புத்த மாநாட்டினை குண்டன் வான (ஸ்ரீநகர்) எனுமிடத்தில் கூட்டினார்.
- பாடலிபுத்திரத்தை வென்றார். அங்கு இருந்த அசுவகோஷரரை தம்முடன் அழைத்துக் கொண்டார்.
- சீனாவுடன் இருமுறை போரிட்டார். முதல் முறை தோல்வியடைந்தார்.
- கனிஷ்கர் சீனாவுடன் போரிட்டு வென்ற பகுதிகள்: காஷ்கர், யார்ககண்டு கோடான்
- புத்த சரிதம் என்ற நூலை "அசுவகோஷா" என்பவர் எழுதியுள்ளார்
- அசுவகோஷரை கீழைநாட்டின் அரிஸ்டாடில் என்று கூறுவர்.
- மிகச் சிறந்த அறிவியல் தத்துவ ஞானி நாகார்ஜீனா

இந்தியாவின் "ஐன்ஸ்டீன்" என்பர்

- சரகா என்ற மருத்துவ அறிஞர். சுஸ்ருதா மற்றும் சரக சம்ஹிதை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.
- கனிஷ்கரை இரண்டாம் அசோகர் என்று கூறுவர்.
- சீனாவில் புத்த மதத்தை அறிமுகப்படுத்தியவர் காச்சியப்ப மாதங்கர்
- கனிஷ்கர் புத்த வரலாறு. சூத்திர அலங்காரம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்

நாகார்ஜீனர்:

- கனிஷ்கரை புத்த மதத்திற்கு மாற்றியவர் நாகார்ஜீனர் (காஞ்சி), இவர் மகாயானத்திற்கு ஆதரவு அளித்து சமஸ்கிருத மொழிக்கு ஆதரவு அளித்தார்.
- இதனால் நாகாத்ஜீனர் புத்த சமயத்தின் மார்டின்லுதர் என்பவர். இவர் எழுதிய நூல் மத்திய மிக சூத்திரம்.
- யுவான் சுவாங் நாகார்ஜீனரை உலக மாமேதை எனக் குறிப்பிடுகின்றார்.

வாசு மித்ரா: மகா விபேஷ சூத்திரம் என்ற நூலை எழுதினார். இந்நூல் மகாயானத்திற்கு விளக்கம் அளித்தது. மேலும் சௌந்தர நந்தம் என்ற நூலையும் சாரிபுத்திர பிரகர்ணம் என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார்.

காந்தாரக்கலை:

6. காஜானே ரிக்காப் - நடமாடும் கருவூலம்
7. கார் கானா – எல்லா பொருட்களும் விற்குமிடம்

முகலாயர் காலத்து கட்டிடக் கலைகள்:

- ஹீமாயூன் கல்லறை: மிராக் மீர்சா கியாக் என்ற பாரசீக கட்டிக கலைஞரால் தில்லியில் கட்டப்பட்டது. தாஜ்மகாலுக்கு இது முன் உதராணம் ஆகும்
- ஆக்ரா கோட்டை: காசிம் கான் என்ற கலைஞரால் கட்டப்பட்டது

- டெல்லி வாயில்: இது யானை வாயில் என்று அழைக்கப்பட்டது
- ஷாஜகானின் ஆட்சிக்காலம் முகலாயக் கலை கட்டிடக் கலையின் சிறப்புமிகு காலமாகும்
- ஷாஜகான் பொறியியல் அரசர், கட்டிடக்கலையில் இளவரசர் என அழைக்கப்படுகிறார்
- உலக அதிசயங்களில் ஒன்றனா தாஜ்மகால் 1653ல் கட்டி முடிக்கப்பட்டது. இதனைச் சலவைக்கல் கனவு என்று அழைக்கின்றனர்.
- பிரஞ்சு நாட்டு கலைஞர் தாவர்னியர் இதனைக் கட்ட சுமார் 3 கோடி செலவழிந்திருக்கும் எனக் குறிப்பிடுகிறார்.

பிற முக்கிய கட்டிடங்கள்:

1. மோதி மஸ்ஜித் (முத்து மசூதி)
2. ஷாஜகானா பாத் (புது தில்லி)
3. செங்கோட்டை (சிவப்பு மணல் கல்லால் கட்டப்பட்டது)
4. ஜீம்மா மஸ்ஜித்
5. ஜஹாங்கீரின் கல்லறை

முகலாயர் காலத்து ஓவியங்கள்:

- பாரசீக ஓவியக் கலையை முகலாயர்கள் இந்தியாவிற்கு கொண்டு வந்தனர்
- இந்தோ-பாரசீக ஓவியக்கலை முறை புதியதாக தோற்றுவிக்கப்பட்டது
- ஹீமாயூன் காலத்தில் மீர் சையத் அலி மற்றும் அப்துல் சமது ஆகிய இரு பெர்சியாவில் ஓவியர்கள் இந்தியா வந்தனர்
- பகாரி வகை ஓவியங்கள் இராசபுத்திரர்கள் வகையைச் சார்ந்தவை
- முகமது காதர், மீர்உசேன் ஆகியோர் ஷாஜகான் காலத்தில் புகழ் பெற்ற ஓவியர்கள்
- ஜகாங்கீர் காலத்தில் ஓவியக் கலை மிக உன்னத நிலையை அடைந்தது. இயற்கை சூழ்நிலைகள், விலங்குகள், பறவைகள், அரசவை நிகழ்ச்சிகள் ஓவியமாக வரையப்பட்டது. பிஸ்வான் தாஸ் மற்றும் உஸ்தாத் மன்சூர் ஆகியவர்கள் ஜகாங்கீர் காலத்தில் வாழ்ந்த மிக புகழ் பெற்ற ஓவியர்கள் ஆவார்

முகலாயர் காலத்து இசை:

- இசையை ஆதரித்த அரசர்கள்: பாபர், ஹுமாயூன் அக்பர் மற்றும் ஷாஜகான்
- அக்பரின் அவை இசைமேதை: தான்சேன்
- தான்சேனின் மருமகன் லால்கான் இவருக்கு ஞான சமுத்திரா என்ற பட்டத்தை ஷாஜகான் வழங்கினார்.
- ஷாஜகானின் காலத்து இசைக் கலைஞர்கள்: ஜகந்நாத், ஜனார்த்தனன்

முகலாயர் கால சமஸ்கிருத இலக்கியங்கள்:

- அக்பருடைய ஆட்சியில் பார்சி – பிரகாஷ் என்ற பாரசீக சமஸ்கிருத அகராதி தயாரிக்கப்பட்டது
- கவிந்திர ஆசார்ய சரஸ்வதி, ஜகந்நாத பண்டிதர் ஆகியோர் ஷாஜகானால் ஆதரிக்கப்பட்டனர்
- ராஜா கானதர், கங்கா லாக்ரி ஆகிய நூல்களை ஜகந்நாத பண்டிதர் எழுதினார்
- இவருக்கு காவிராஜ் என்ற பட்டத்தை ஷாஜகானால் ஜகந்நாத பண்டிதருக்கு வழங்கப்பட்டது
- கிருதராஜ் என்பவர் சமஸ்கிருத நாடகங்களை

எழுதினார்.

- ஆன்நத லாதிக சம்பு என்ற நூலை வைஜயந்தி - கிருஷ்ணகதா இணைந்து எழுதினார்கள்.

முகலாயர்கள் கால சமஸ்கிருத இலக்கியங்கள்

- கபீர் எழுதிய நூல்கள்: தோஹாஸ், சாகீஸ்
- பகவான்தாஸ், மான்சிங் இந்தியில் கவிதைகளை எழுதினார்
- இராமசரிதமனசு என்ற இந்தி இராமாயணத்தை துளசி தாசர் எழுதினார்
- சூர்தாசர் எழுதிய நூல் சூர்சாகர்
- கேசவதாசர் எழுதிய கவிதைத் தொகுப்பு: கவிப்பிரியா
- சிவாசியின் ஆதரவு பெற்ற கவிஞர்கள்: திருப்பதி சகோதரர்கள், பூசான் திருப்பதி, மதிரான் திருப்பதி

முகலாயர்கால பாரசீக இலக்கியங்கள்

- ஆட்சி மொழியாக 1893 வரை பாரசீகம் இருந்தது. பின் உருது தொடர்ந்தது
- அபுல் பாசல் அக்பர் நாமா மற்றும் அயினி அக்பர் என்ற நூலை எழுதினார்
- பகௌனி வால்மீகி இராமாயணத்தையம், மகாபாரதத்தின் சில பகுதிகளையும் மொழி பெயர்த்தார்
- இப்ராகிம் என்பவர் அதர்வண வேதத்தை மொழி பெயர்த்தார்.
- லீலாவதி என்ற கணித நூல் மொழி பெயர்க்கப்பட்டது
- உபநிடதம், பகவத் கீதை, யோக வசிட்டம் ஆகியவை தாராஷீகோ என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டது

முகலாய பேரரசு வீழ்ச்சியடைக் காரணங்கள்:

1. 1739ல் இராணிய நெப்போலியன் நாதர்ஷாவின் படையெடுப்பு
2. 1742 மற்றும் 1750ல் அகமது ஷா அப்தாலி படையெடுப்பு
3. மராத்தியர் சீக்கியர் எழுச்சி
4. ஷியா பிரிவைச் சாந்த பாமி அரசர்களின் எழுச்சி

பாமினி அரசுகள்

பாமன்ஷா (1347 – 1358)

சான்று: புர் ஆனி ம ஆசீர் என்ற நூல்

- டில்லி சுல்தான்களின் ஆட்சி மறைவுக்குப்பின் எழுந்த சுதந்திர முஸ்லீம் அரசுகளில் முக்கியமானது பாமினி அரசு
- பாமினி அரசு 1347ல் நிறுவப்பட்டது
- முகமது-பின்-துக்ளக்கிடம் பணிபுரிந்த இஸ்மாயில் முக் தௌலதாபாத் கோட்டையை கைப்பற்றி நாசீர் உதுன் ஷா என்ற பெயருடன் ஆட்சி செய்தார். பின் அவர் தனது அரசை அசன் அடில் முசாப்பர், சபர்கான் - இ

அலாவுதீன் பகமான் ஷா என்றழைக்கப்பட்ட ஆசன் கங்குவிற்கு அளித்தார். இவர் 1347ல் பாமினி அரசை நிறுவினார்.

- கங்கா என்பது பிராமன் பெயர் என்று சிலர் கூறுகின்றனர்
- தந்தை: இசுபந்தியார்
- தலைநகரம்: 1422 வரை சூல்பர்கா என்கிற ஆசனாபாத்
- ஆட்சி எல்லைகள்: வடக்கு வயின் கங்கா தெற்கு: கிருஷ்ணா நகரி
  மேற்கு: தௌலதாபாத் கிழக்கு: போங்த்

- அரசு நான்கு தரப்பாக பிரிக்கப்பட்டது

1. குல்பர்க்கா 2. கேளலதாபாத் 3. பீரார் 4. பீடார்

- இவர் 1358ல் இறந்தார்

முகமது ஷா I 1358 - 1375

- ஆட்சிக் காலம் முழுவதும் வாரங்கல் மற்றும் விஜயநகர அரசுடன் போரிட்டார்
- விஜய நகர அரசர் புக்கரைக் கொன்றவர்

முஜாஇத் ஷா – 1375 - 1378

- இவர் உறவினர் தாவூத் என்பவர் செய்த சதியால் கொல்லப்பட்டார். தாவூத் அரியணை ஏறினார்

முகமது தாவூத் I - 1378

- தாவூத் முஜாகித் ஷாவின் மகள் ரூத்பர்வர் ஆகா என்பவரால் கொல்லப்பட்டார். ஆசன் கங்குவின் நான்காவது மகன் முகமது கானின் மகன் முகமது ஷா ஆட்சி பிடித்தார்.

முகமது ஷா II 1378 - 1397

- அரிஸ்டாட்டில் எனப்பட்டார்

பெரோஷ் ஷா பாமன் - 1397 - 1422

- பெரோஸபாத் நகரை அமைத்தார்
- 1406ல் விஜயநகர அரசுடன் போரிட்டு வென்றார்
- 4120ல் தோற்றார். பின் ஆட்சியை தம்முடைய சகோதரன் அகமதுவிற்கு அளித்தார். அகமது இவரை கொன்று விட்டார்
- இவருடைய குல்பர்க்கா காலம் முடிவுற்றது

அகமது ஷா 1422 - 1435

- விஜயநகர பேரரசு இவருடன் சமாதானம் பேசியது வாரங்கள் தோற்கடிக்கப்பட்டது. மாளவம் தோற்கப்பட்டது
- இவரது காலத்தில் இருந்து பீடார் காலம் துவங்குகிறது
- குரோசாவின் கவிஞர் ஷேய்க் ஆஜரீ பீடார். அரண்மனைக்கு வந்தார். அரண்மனை கதவில் கவிதையை மௌலானா ஷர்ப் - உ தீன் மீஜான்தீரன் எழுதினார்

லாவுதீன் II 143 - 1457

ஹீமாயூன் 1458 – 1461

நிஜாம் ஷா 1461 – 1463

மூன்றாம் முகமது 1463

- இவரின் அமைச்சர் முகமது கவான் ஆவார். இவரது காலத்தில் இரஷ்யா நாட்டுப் பயணியான Althanasius Nikitin (1470 – 1474) பாமினி அரசிற்கு வந்தார்.
- சங்கமேஸ்வரர் அரசருடன் போரிட்டு கேல்னான் கோட்டையை கைப்பற்றினார்
- கேவா விஜயநகர பேரரசிடமிருந்து கைப்பற்றப்பட்டது
- 1478ல் இரிசாவுடன் போர்
- முக்கிய அமசம்: 1481ல் காஞ்சிபுரம் கைப்பற்றப்பட்டது
- மிகுந்த செல்வம் கைப்பற்றப்பட்டது
- முகமது காவன் தாக்கப்படுதல்
- இவரது காலத்தில் அல்தானசியல் நிகிதன் என்ற ரஷ்ய பயணி சுற்றுப்பயணம் செய்துள்ளார்
- முகமது ஷா: இவர் அமீர் ஆலிபரித் என்பவரின் கைப்பிடியில் இருந்தார்
- பரீத் தக்காணத்தின் குள்ளநரி எனப்பட்டார். பாமினி அரசின் கடைசி அரசர் : கலீ முல்லா ஷா
- பாமினி அரசு சிதைவடைந்த பின்

தக்காணத்தில் ஐந்து சுல்தான்கள் ஆட்சி ஏற்பட்டது

பகுதி	துவக்கியவர் மரபு
அகமதுநகர்	நிசாம் சாகி
கோல்கொண்டா	குதூப் சாகி
பீஜப்பூர்	ஆதில் சாகி
பீரார்	இமாத் சாகி
பீடார்	பரீத் சாகி

- பாமினி அரசில் இருந்து பிரிந்த முதல் அரசு பீரார் ஆகும். 1484ல் இதனை பாதவுல்லா இமாத் ஷா என்பவர் துவக்கினார். 1574ல் அகமது நகருடன் இணைக்கப்பட்டார்

கோல்கொண்டா:

- வாரங்கல்லைச் சார்ந்த பகுதி கோல்கொண்டாவகும்

இதனை குலி ஷா என்பவர் துவக்கினார்

- அகமது நகரின் சிறந்த தளபதி மாலிக் அம்பர்
- பாமினி அரசின் சிறந்த நிர்வாகி முகமது காவன்
- பாமினி அரசின் மாகணங்கள் தாரப்புகள் (Tarafs) என பிரிக்கப்பட்டு அவை தாரப்புகளின் கட்டுபாட்டில் இருந்தது. விஜயநகர பேரரசின் வைரச் சுரங்கங்கள் இருந்தமையால் பாமினி அரசுகள் போரிட்டது.

விஜயநகரப் பேரரசு

- கி. பி. 1336ல் அரிகரர், புக்கர், கம்பணன், மாரப்பன் மற்றும் முத்தப்பன் ஆகிய 5 சகோதரர்களால் துங்கப்பத்திரையின் வடகரையில் விஜயநகரப் பேரரசு நிறுவப்பெற்றது.
- முதலாம் புக்கர் - இளவரசு பட்டம் மேற்கொண்டு அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள குத்தி கோட்டை ஆளுநர்
- முதலாம் கம்பணன் - உதயகிரி
- மாரப்பன் - கொங்கண நாடு
- இப்பேரரசு நிறுவ உதவியவர் சிருங்கேரி சங்கரமட ஆசாரியாார் மாதவாச்சாரியார் அல்லது வித்யாரண்டர் மற்றும் சாயனார் ஆவார்கள்
- **வரலாற்று ஆசிரியர் ஹீராஸ் பாதிரியார் இவர்கள் ஹொல்சல அரச மரபினர் என்று கூறுகிறார்.**
- இப்பேரரசை சங்கம் சலுவ, துளுவ, ஆரவீடு வமிசித்தவர் ஆட்சி புரிந்தனர்
- **சங்கம வமிச மன்னர்கள்:**

  முதலாம் ஹரிஹரர் 1336 – 1356

  முதலாம் புக்கர் 1356 – 1377

  இரண்டாம் ஹரிஹரர் 1377 – 1404

  விருபாக்ஷார் 1404 – 1405

  இரண்டாம் புக்கர் 1405 – 1406

  இரண்டாம் விஜயராயர் 1446 - 1447
- மல்லிகார்ஜீனன் 1447 – 1465
- இரண்டாம் விருப்பாக்ஷர் 1465 – 1485
- பிரவுத ராயர் 1485

முதலாம் ஹரிஹரர் (1336 – 1356)

- பெரிஷ்டா மற்றும் டபடாபா ஆகிய இரு இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களும் பாமினி அலாவுதீன் ஹாசன் கங்கு முதலாம் ஹரிஹரண் ஆகிய இருவருக்கும் நடைபெற்ற போரில் முதலாம் ஹரிஹரர் தோல்வி அடைந்தார் என குறிப்பிட்டுள்ளார்கள்

முதலாம் புக்கர் (1356 – 77)

- தென் இந்தியாவின் மீது படையெழுத்து

மதுரை, இராமேஸ்வரம் ஆகிய இடங்களை வென்றதாக கம்பண்ணனின் மனைவி கங்கா தேவி எழுதிய மதுராவிஜயம் என்ற நூல் கூறுகிறது

- சீனாவிற்கு ஒரு தூதுக்குழு அனுப்பினார்
- லக்கண்ணா என்பவர் தென்கடல் தலைவராக நியமிக்கப்பட்டார்
- இவர் இம்மாடி தேவராயா பிரௌத தேவராய மற்றும் கஜபேடகரா என்றும் அழைக்கப்பட்டார்

இரண்டாம் ஹரிகரர் (1377 – 1404)

- இவர் மகாராஜாதி ராஜா, ராஜ பரமேஸ்வர் போன்ற பட்டங்களை சூட்டிக் கொண்டார்
- ரெய்ச்சூர் பகுதியை கைப்பற்ற பாமினி சென்றார். பிருஷ்டாவுடன் போரிட்டு தோற்றார். இலங்கை மீது போரிட்டார்

முதலாம் தேவராயர் (1406 – 1422)

- வாரங்கல் உதவியுடன் பேரோஸ் ஷா பாமனுடன் போரிட்டு வென்றார்
- துங்கப்பத்திரா நதியின் மீது அணையைக் கட்டினார்
- 1420ல் நிக்கோலா கோண்டி, 1443ல் அப்துல் ரசாக் முதலானவர்கள் விஜயநகரம் வருகை புரிந்தனர்

இரண்டாம் விஜயராயர் (1446 – 47)

மல்லிகார்ஜீனன் (1447 – 65)

இரண்டாம் விருப்பாக்ஷர் (1465 – 1485)

- திறமையற்ற இவர் காலத்தில் ஒரிசா நட்டு அரசர் புருஷோத்தும் கஜபதி திருவண்ணாமலை வரைச் சென்றார்
- நரசிம்ம சலுவாட இவர் ஆட்சியை கைப்பற்றினார்

சலுவ வம்ச மன்னர்கள்

சலுவ நரசிம்மர் (1485 – 90)

திம்ம பூபாலன்

நரச நாயக்கர் (1490 – 1503)

சலுவ நரசிம்மர் (1485 – 90)

- தமக்குப்பின் ஆட்சியை தனது தளபதி நரச நாயக்கரிடம் ஒப்படைத்தார்

நரச நாயக்கர் (1490 – 1503)

துளுவ வம்ச மன்னர்கள்

துளுவ நரச நாயக்கர் - 1491 – 1503

அச்சுத தேவ ராயர் - 1529 – 1542

சதாசிவ ராயர் - 1542 – 1570

வீரநரசிம்மர் - 1503 – 1509

கிருஷ்ண தேவராயர் - 1509 – 1529

- மாமூது ஷாவினால் கைப்பற்றப்பட்ட அடோனி, கர்நூல் ஆகியவற்றை மீண்டும் கைப்பற்றினார்.

கிருஷ்ண தேவராயர் (1509 – 29)

- துளுவ வம்ச மன்னர்களில் சிறந்தவர் கிருஷ்ண தேவராயர்
- இவர் வீர நரசிம்மரின் ஒன்றுவிட்ட சகோதரர்
- 1509ல் கிருஷ்ண தேவராயர் பாமினி சுல்தானை தோல்வியுறச் செய்தார். 1512ல் ரெய்ச்சூர் தோவாப். குல்பர்கா, பீடார் ஆகியவற்றை கைப்பற்றினார்
- 1512ல் உம்மத்தூர் பாளையக்காரர் கங்கராஜாவுடன் போரிட்டு ஸ்ரீரங்கப்பட்டினம், சிவசமுத்திரம் ஆகியவற்றை கைப்பற்றி ஸ்ரீரங்கப்பட்டினத்தை தலைமையிடமாக ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கினார்.
- 1513 – 18 வரை போரிட்டு உதயவீடு மற்றும் கொண்ட வீடு ஆகியவற்றை

ஒரிசாமன்னன் கஜபதியிடமிருந்து பறித்தார்

- தெலுங்கானா அரசன் கூலிகுத்துஷாவை வென்று தெலுங்கானா கைப்பற்றப்பட்டது
- 1520ல் தனது மனைவி நகலா தேவியின் நினைவாக நாகலாபுரி என்ற நகரம் நிறுவப்பட்டது
- திருவண்ணாமலை, திருப்பதி ஆலயங்கள் கட்டப்பட்டது. 'அசாரே' ஆலயம் சிறப்பான ஆலயம்
- இவரது அவையை அஷ்திக்கஜங்கள் என கூறப்படும் எட்டு தெலுங்கு கவிஞர்கள் அலங்கரித்தனர்
- அல்லானி பெத்தண்ணா – தெலுங்கு இயக்கத்தின் தந்தை
- இவர் மதுசரிதம் என்ற நூலை எழுதியுள்ளார்
- இதன் மூலம் மக்களின் சமுதாய நிலை அறிய முடிந்தது
- திம்மண்ணா – பாரிஜாத் பகர்னமு தெய்வலோகத்தில் இருந்து பாரிஜாத மலர் கொண்டு வரப்பட்ட கதை
  - இராமபத்ரா – சகல கதா சங்கிரதம்
  - மல்லண்ணா – ராசசேகர சரிதம்
  - சூரண்ணா
  - இராம ராஜா பூசனா
  - தேனாலி இராமகிருஷ்ணா
  - கிருஷ்ணதேவராயர்-ஜாம்பவதி கல்யாணம்
- உஷாபரிணயம் ஆகிய வடமொழி நூல்களை எழுதினார்
- அமுக்தமால்யதா அல்லது விஷ்ணு சித்தமு என்ற தெலுங்கு நூலையும் இயற்றினார். இதன் மூலம் விஜயநகர அரசின் அரசியல் நிலைமை அறியமுடிகிறது
- அவர் போர்ச்சுகீசியருடன் நட்புறவு கொண்டிருந்தார். அவர்களிடமிருந்து குதிரைகளை பெற்றார்.

தலைக்கோட்டைப் போர் - 1565

- இப்போரில் ஐந்து தக்காணச் சுல்தான்கள் ஒன்று சேர்ந்து விஜய நகரப் படைகளை 1565ல் தலைக்கோட்டை என்னும் இடத்தில் தோற்கடித்தது
- இரண்டாம் தேவராயருக்குப் பின் பாமினி சுல்தான்கள் மற்றும் ஒரிசா மன்னர் கஜபதி ஆகியோர் விஜயநகர அரழச கைப்பற்றியதை கங்கதாச பிரதாப விலாசம் என்ற நாடக நூல் விவரிக்கின்றது. இதனை எழுதியவர்: கங்காதரன்
- விஜய நகர பேரரசின் அழிவுச் சின்னங்கள் கிடைக்குமிடம் ஹம்பி

ஆரவீடு வம்சம்

ராம ராயர்	1542 – 1565
திருமலை தேவராயர்	1565 – 1572
முதலாம் ஸ்ரீ ரங்கர்	1572 – 1586
இரண்டாம் வெங்கட	1586 – 1614
இரண்டாம் ஸ்ரீ ரங்கர்	1614 – 1614
ராம தேவா	1617 – 1632
மூன்றாம் வெங்கடா	1632 – 1642
மூன்றாம் ஸ்ரீ ரங்கா	1642 - 1646

பிற நூல்கள்	**எழுதியவர்**
கவி கர்ண ரசாயணம்	நரசிம்ம கவி
தெய்வ நா விலாசம்	கொண்ட வீட்டு இலட்சுமி
சங்கீத சூர்யோதயம்	இலட்சுமி நாராயணன்
பிபோத சந்திரோதயம்	கிருஷ்ண மிச்ரல்
வியாசாமிர்தம்	வியாசராயர்
இரு சமய விளக்கம்	ஹரிதாசன்

விஜய நகர பேரரசிற்கு வருகை தந்தவர்கள்

வருகை தந்தவர்கள்-ஆட்சி செய்த மன்னர்கள்

Athanasivs Nikitin - இரண்டாம் முகமது ஷா

Fernao Huniz – அச்சுததேவசராயர்

Abdur Razzak - இரண்டாம் தேவராயர்

Nicolo Conti – முதலாம் தேவராயர்

Domingo Paes – கிருஷ்ண தேவராயர்

Ibn Battutah – முதலாம் ஹரிஹரா

Duarte Edwardo Barbosa – கிருஷ்ண தேவராயர்

விஜய நகர பேரரசின் ஆட்சித் துறைகள்:

கண்டசாலா - இராணுவம்

சர்வ மான்யா – கோயிலுக்கு நிலம் வழங்குதல்

அதவனா - வருவாய்

விஜயநகர பேரரசு முக்கிய குறிப்புகள்:

- விஜயநகர பேரரசுவின் முக்கிய தலைநகரம் விஜயநகர் ஆகும்
- வேதாந்த தேசிகர் வடகலைப் பிரிவின் தலைவர்
- மணவாள மாமுனி தென்கலைப் பிரிவின் தலைவர்
- வடகலைப் பிரிவினர் சமஸகிருதத்தை பின்பற்றினர். சாதி முறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர்
- தென்கலைப் பிரிவிற்குப் பிரபந்தங்களைப் பின்பற்றினர். சாதி முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை
- திராவிடக் கட்டிடங்களையும், இந்தோ சரசானிக் கட்டிடக் காலையும் விஜயநகர மன்னர்கள் காலத்தில் சிறப்புற்ற விளங்கின
- இராமேஸ்வரம் கோயிலில் காணப்படும் இருகோபுரங்களும், ஸ்ரீரங்கத்திலுள்ள சேஷசிரி மண்டபமும் விஜயநகரக் கட்டிடக் கலைக்குச் சிறந்த உதாரணங்களாகும்.
- விஜயநகர மன்னர்கள் வேலூர் கோட்டையின் உட்புறம் புகழ்பெற்ற கோயிலைக் கட்டினார்கள். கோயில் வளாகத்தில் கல்யாண மண்டபமும் இணைக்கப்பட்டுள்ள அமைப்பு முறை வேலூர் கோவிலில் சிறப்பு அம்சமாகும்
- மதுரை அரண்மனை இந்தோ – சரசானிக் கட்டிடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது
- கிருஷ்ணதேவராயர் சிதம்பரம் கோபுரத்தின் ஒரு பகுதியினையும், காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் கோவிலின் தென் பகுதியினை கட்டி முடித்துள்ளனர்
- விஜயநகர மன்னர்கள் பின்பற்றிய கட்டிடக் கலைமுறை மதுரைக் கட்டிடக் கலை முறையாகும்.

விஜயநகர காலம் - தமிழ் நூல்கள்

நூல்கள் எழுதியவர்

சிவஞான போதம் - மெய்கண்டார்

சேதுபுராணம் - அழகிய தேசிகர்

கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்

திருமலைபுராணம் - திருமலைநாதர்

சொக்கநாதர் உலா

இருசமய விளக்கம் - ஹரிதாசர்

அரிச்சந்திர புராணம் - நல்லூர் வீரகவியார்

நன்னூல் - பவநந்தி

மைசூர் எழுச்சி – ஹைதர் அலி – திப்புசுல்தான்

- விஜயநகர ஆட்சிக்குப் பின்னர் மைசூர் ஒரு சுதந்திர அரசாக மாறியது
- சுதந்திர மைசூர் அரசின் வித்தகர் சிக்கதேவராய உடையார்

- ஹைதர் அலி மைசூர் அரசில் போர் வீரராகப் பணியாற்றி 1755ல் திண்டுக்கல் பவுஜ்தாராக மைசூர் அரசரால் நியமிக்கப்பட்டார்
- அவர் 1763ல் பெட்னூரைக் கைப்பற்றினார்
- மைசூரை ஆட்சி செய்த சிக்கி கிருஷ்ணராஜ் தனது அமைச்சர் நஞ்சராசாவை அடக்க ஹைதர் அலியின் உதவியை நாடினார். ஹைதர் அலி நஞ்சராசாவை அடக்கியதுடன் மைசூர் மன்னரையும் நீக்கித்தாமே 1764ல் அரசரானார். இவருடைய திவான் பூர்ணையா ஆவார். இவரது மகன் திப்பு சுல்தான் ஆவார்
- திப்புசுல்தான் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் சுதந்திர மரத்தினை நட்டார். பிரெஞ்சு புரட்சியில் மிகுந்த ஆர்வம் கொண்ட அவர் பிரெஞ்சு அலுவலர்களின் உதவியுடன் இராணுவத்தை நவீன மயமாக்க முயற்சிகள் மேற்கொண்டார். மேலும் Jacobin Club உறுப்பினராகவும் சேர்ந்தார். பாதுஷா என்று தம்மை அழைத்துக் கொண்ட இவர் நான்காம் மைசூர் போரில் உயிர் இழந்தார். திப்புசுல்தானின் வாரிசுகள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மராத்தியர்கள்

மராத்தியர்களின் எழுச்சிக்கான காரணங்கள்:

1. மலைகளில் இருந்தமையால் ஏற்பட்ட உடல் வலிம
2. இராமதாஸ், துக்காராம், ஏக்நாத் போன்றவர்கள் ஏற்படுத்திய மனவலிமை
3. தக்காண பீடபூமியின் மேற்பகுதியில் ஏற்பட்ட உறைவிடம் - மலைப்பகுதி - இயற்கை அரண்.
4. வறுமை
5. பொது சமயம்
6. பொதுப் பண்பாடு – மராத்தியர் அனைவரும் ஒன்றே
7. மொழி வாரியான ஒற்றுமை
8. மராட்டிய பெண்களின் தியாக உணர்வு
9. இவர்கள் சத்திரபதி என்ற பெயருட்ன ஆட்சி செய்தனர்

ஷாகி போன்சுலே

- இவரின் மனைவிகள் ஜீஜாபாய் மற்றும் துகாபாய்
- துகாபா – மகன் - தஞ்சை வெங்கோஜீ
- இவர் ஆதரித்த புலர் - ஜெயராம்

சிவாஜி (1630 – 1680)

- சிவனார் கோட்டையில் பிறந்ததர்
- தாதாஜி கொண்டதேவ் - ஆசிரியர்
- குரு ராமதாஸ் - குரு
- குரு ராமதாஸ் எழுதிய புத்தகம் தசபோதம்
- முதல் மனைவி – சாயாபாய்
- 1646 தோணாக் கோட்டை கைப்பற்றுதல்
- 1656 ஜாவ்லியை கைப்பற்றுதல் (திருப்புமுனை)
- 1656 – ரெய்கார் கோட்டை கைப்பற்றுதல்
- 1657 – அவுரங்கசீப்பிடம் தோல்வி
- 1657 – கொலாபா பகுதி – கல்யாண் பகுதிகள் கைப்பற்றுதல்
- 1659 – அப்சல்கான் கொலை

  பீஜப்பூர் சுல்தான் அலி அதில்ஷா சிவாஜிக்கு பாடம் கற்பிக்க எண்ணி அவரை வஞ்சகமாக கொலை செய்ய அப்சல் கான் என்பவரை அனுப்பினார். சிவாஜி அவரை தழுவும் போது தனது கையில் உள்ள புலி நகத்தால் அவரை கட்டியணைத்து

கொன்றார். இதனை தொடர்ந்து பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை சுதந்திர அரசராக ஏற்றார்

- 1663 – செயிஸ்டகானை வென்றது: சிவாஜியின் வளர்ச்சியினைக் கண்ட அவுரங்கசீப் அவரை தந்திரமாக கொல்ல செயிஷ்டகான் என்பவரை அனுப்பினார். சிவாஜி செயிஷ்டகானின் முகாமை எதிர்பாரதவிதமாக இரவில் தாக்கினார். செயிஷ்டகான் காயத்துட்ன தப்பினார்.
- 1664ல் சூரத் படையெடுப்பு மற்றும் கொள்ளையடிப்பு
- 1665 – புரந்தார் உடன்படிக்கை: அவுரங்கசீப்பின் பிரதிநிதி ஆம்பரைச் சார்ந்த இராசா ஜெய்சிங் 1665ல் சிவாஜியுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி சிவாஜி கைப்பற்றிய 35 கோட்டைகளில் 23 முக்கிய கோட்டைகளை முகலாயர்களுக்கு திருப்பி அளித்தார். பீஜப்பூர் சுல்தான் முகலாயர்களை தாக்கும்போது முகலாயர்களுக்கு உதவுவதாக ஒப்புக் கொண்டார்.
- 1666 – சிவாஜி தனது மகன் சாம்பாஜியுடன் ஆக்ரா சென்றபோது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின் ஆக்ரா கோட்டையில் இருந்து தப்பித்தார். பின் முகலாயர்களுக்கு கொடுத்த கோட்டைகளை கைப்பற்றினார்
- 1672ல் முகலாய படைகளை Salher என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தார்.
- 1670 – 74 கொண்டனா, புரந்தர், மகோலி, நாந்தத்
- 1672 கூல்நர் கேட்டை கைப்பற்றுதல்
- 1674ல் ரெய்கார் கோட்டையில் நடைபெற்ற முடிசூட்டு விழாவில் சத்திரபதி என முடி சூட்டிக்கொண்டார் (முடிசூட்டு விழா நடத்தியவர் காகப்பட்டர்)
- 1677 கர்நாடக படையெடுப்பு
- 1678 செஞ்சி, தஞ்சாவூர், வேலூர் கோட்டையை கைப்பற்றுதல்
- 1680 மறையுவு
- இவர் மலைவாழ் எலி எனப்பட்டார்
- சூரத் நகரில் இவரால் கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியினர்:

1. ஹென்றி ரெபிங்க்டன் 2. ராண்டால்ப் டெய்லர் 3. பிலிப் கிப்பர்ட் ஆவர்

மதிப்பீடுகள்

வின்சென்ட் ஸ்மித்: திருடர்களின் தலைவன்.

காபிகான் - வஞ்சகத்தின் பிதா

சர்க்கார் - தேசிய படை உருவாக்கிய வீரர்

அஷ்டப்பிரதான்

- சிவாஜியின் ஆட்சிக்கு உதவிடும் எண்மர் குழுவிற்கு அஷ்டப்பிரதான் என்று பெயர். அவர்கள் முறையே

1. பேஷ்வா (அ) முக்கியபிரதான் - இவர் முதல் அமைச்சர், நாட்டின் நலன் மற்றும் முன்னேற்ற வழிகள்
2. மயீம்தார் (அ) அமாத்தியர் - நிதியமைச்சர்
3. வாக்னிஸ் (அ) மந்திரி – அரசரின் நிகழ்ச்சிகளை பதிவு செய்தல்
4. தபீர் (அ) சுமந்தா – அயல்நாட்டுத்துறை
5. சச்சிவ் - அரசரின் தபால் போக்குவரத்து
6. பண்டிட்ராவ் - பூசாரி
7. சாரிநெளபத் (அ) சேனாதிபதி – படைத்தளபதி

8. நியாதீஷ் - தலைமை நீதிபதி

- நாடு நான்கு பிராந்த் (மாநிலம்) களாகப் பிரிக்கப்பட்டது
- மாநிலங்கள் பர்கானாக்களாக பிரிக்கப்பட்டது
- கொரில்லா போர் முறை பின்பற்றப்பட்டது
- வரிகள் - சௌத், படைவரி (1/4)
- சர்கேஷ்முகி – விளைச்சலில் பங்கு (1/10)
- ஜகத் - விற்பனை வரி
- முஷ்தார்பா – வணிகவரி
- ஜட்ஜ்தோரா – ரெஸ்ஸின் மீது விதிக்கப்படும் வரி.
- பாரசீக மொழிக்கு பதிலாக மராத்தி ஆட்சி மொழி
- சிவாஜியின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள்

1. சாந்தூர் 2. பூனா 3. இராசகி 4. கார்வார்
5. சதாரா 6. ரத்னகிரி 7. கெய்ரா 8. பெல்லாரி
9. கோலார் 10. வேலூர் 11. ஆரணி 12. தஞ்சை

- கடற்படையின் தலைமையிடம் கொலாபாவில் உள்ளது
- சிவாஜி 53 வது வயதில் இறந்த பிறகு, அவரது முதல் மனைவியின் மகன் சாம்பாஜிக்கும் இரண்டாவது மனைவியின் மகன் இராசாராமிற்கும் இடையே வாரிசுப்போர் ஏற்பட்டது. அவுரங்கசீப்பை எதிர்த்து அவரது மகன் அக்பர் கலகம் செய்த போது சாம்பாஜி அக்பருக்கு அடைக்கலம் கொடுத்ததால் அவுரங்கசீப்பால் சாம்பாஜி கொலை செய்யப்பட்டார். அவரது மகன் இரண்டாம் சிவாஜி எனப்படும் சாகு அவுரங்கசீப்பால் சிறைப்பிடிக்கப்பட்டார்.

பேஷ்வாக்கள்

- சிவாஜியின் இரண்டாவது மனைவி – அசீராபாய் இவரது மகன்கள் - இராசாராம், தாராபாய், இராமபாய்
- இராசாராம் மகன்கள் - சிவாஜி III, இராமராசா.
- சிவாஜியின் பேரன் சாகு 1707 அவுரங்கசீப் மரணத்திற்கு பின் முகலாயர் பிடியில் வெளியே வந்தார்
- இதற்கு பிறகு அவருக்கும் அத்தையான தாராபாய்க்கும் வாரிசுரிமை ஏற்பட்டது
- இதனை தொடர்ந்து பேஷ்வாக்களின் ஆதிக்கம் ஏற்பட்டது

பாலாஜி விசுவநாத் 1714 – 1720

- இவர் சாகுவின் முதலமைச்சர் ஆவார்
- இவர் முதல் பேஷ்வா ஆவார்
- இவரை தொடர்ந்து பேஷ்வாக்கள் வாரிசுரிமையாக்கப்பட்டார்கள்

பாஜிராவ் - I 1720 – 1740 (2ம் பேஷ்வா)

- சாம்ராட் சிவாஜிக்கு பிறகு கொரில்லா போர் முறையை தீவிரமாக்கியவர்
- 1739ல் போர்ச்சுகீசியரை வென்று சால்செட், பசீன் பகுதிகளை வென்றார்
- இவரும், இவரது சகோதரர் சிமாஜி அப்பர் தொடர்ச்சியாக 36 போர்களை புரிந்து வெற்றி கண்டனர். எனவே இவர் மராத்தியப் பேரரசை இரண்டாவது தடவையாக நிறுவியவர் என்று கூறுவார்

பாலாஜி பாஜிராவ் 1740 – 1761 (3ம் பேஷ்வா)

மூன்றாம் பானிபட் போர் - 14.01.1761

- தற்போது அரியானா மாநிலத்தில் உள்ள பானிப்பட் என்ற இடத்தில் இப்போர் மராத்தியர்களுக்கும் ஆப்கான் மன்னர் அகமது ஷா ஆப்தாலிக்கும் இடையே

நடைபெற்றது. மராத்தியர்கள் சார்பில் பாலாஜி பாஜி ராவ், சதசிவ ராவ், மகாராஜ் சுராஜ் மால் மற்றும் இப்ராகிம் கான் ஆகியோரும் ஆப்கானிஸ்தான் சார்பில் அகமது ஷா ஆப்தாலி, நாஜிப் உத் தொளா சிராஜ் உத் தொளா ஆகியோரும் போரிட்டனர். இதில் அகமது ஷா ஆப்தாலி அணி வெற்றிப்பெற்றது

- மராட்டியர்கள் வலுவான அணியை அமைக்காத காரணத்தால் தோல்வி அடைய நேரிட்டது. மராட்டியர்கள் இராசபுத்திரர்களின் உள் விவகாரங்களில் தலையிட்டதாலும், சீக்கியர்கள் மற்றும் ஜாட் இனத்தவர்கள் மீது அதிக வரி வசூலித்தாலும், அயோத்தி நவாப்பின் ஆதிக்கத்தை குறைத்தாலும் மராட்டியர்கள் இப்போரில் தோல்வியடைய நேரிட்டது

மாதவ ராவ் (1761 – 72) (4ம் பேஷ்வா)

நாராயண ராவ் (1772 – 73) (5ம் பேஷ்வா)

மாதவ ராவ் நாராயணா (1773 – 95) (6 பேஷ்வா)

முதல் மராத்திய போர் 1775 - 82

- பேஷ்வா நாராயணராவ் அவரது சித்தப்பா ரகுநாத ராவால் கொலை செய்யப்பட்டார்
- நாராயணராவ் மகன் இரண்டாம் மாதவராவ் பேஷ்வா பதவி ஏற்றார்
- ரகுநாதராவ் ஆங்கிலேயரின் துணை நாடினார்
- 1775ல் சூரத் உடன்படிக்கை ஏற்பட்டது
- சால்செட், பஸ்சீன் பகுதிகளை ஆங்கிலேயருக்கு அளிக்க ரகுநாத ராவ் இசைவு தெரிவித்தார்
- இருப்பினும் போர் ஏற்பட்டது
- 1776ல் புரதர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி பூனா அரசாங்கம் 12 இலட்ச ரூபாய் சால்செட் மற்றும் புரோச் ஆகியவற்றை ஆங்கிலேயர்கள் பெற்றனர். அதற்கு பதிலாக ரகுநாதராவை ஆங்கிலேயர் கைவிட்டனர்
- புரந்தர் உடன்படிக்கை ஏட்டளவிலேயே நின்றுவிட்டது
- வளர்ந்துவரும் பிரான்சு பகையைப்பற்றிக் கவலை கொண்ட இங்கிலாந்து அரசு இரகுநாதராவுடன் தொடர்ந்து உறவை வைத்துக்கொண்டு, நானா படனாவிசை அடக்குமுறை மும்பை அரசாங்கத்திற்குச் செய்தி அனுப்பியது. நானாவை எதிர்த்து மும்பை அரசாங்கம் போர் தொடுத்தது. ஹோல்காருடனும், மாதாஜி சிந்தியாவுடனும் சேர்ந்து கூட்டுப் படையின் உதவி பொண்டு நானா ஆங்கிலேயப் படைகளை வாத்கான் என்னும் இடத்தில் அடிபணியச் செய்தார். ஆங்கிலேயர் 1779ல் வார்கான் போர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.
- நானாசாகிப், ஆங்கிலேயர்களை அடியோடு விரட்டுவதற்காக நிசாம், ஹைதர்அலி, மற்ற மராத்தியத் தலைவர்களை ஒன்று சேர்த்து ஒரு கூட்டுப்படையை அமைத்தார். தளபதி கோடார்டு தலைமையில் ஆங்கிலப் படையினர் அகமதாபாத் பசீன் இரண்டையும் கைப்பற்றினார். பாப்ஹாமின் தலைமையின் கீழ் மற்றொரு படை குவாலியரைக் கைப்பற்றியது. சிவரியில் மாதாஜி சிந்தியா ஆங்கிலப் படைகளால் சிறு தோல்வி மட்டுமே ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. மகாதாஜி சிந்தியா ஆங்கிலேயருடன் 1782ல்

சால்பாய் உடன்படிக்கை செய்து கொண்டார்.

இரண்டாம் பாஜிராவ் (1795 – 1818) (7 மற்றும் கடைசி பேஷ்வா)

இரண்டாம் மராத்தியப் போர் 1802 - 1803

- 1802ல் இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயரின் பசீன் (துணை படை) திட்டத்தை ஏற்றார்
- இதை சிந்தியா மற்றும் போன்ஸ்லே எதிர்த்தனர்
- ஆர்தர் வெல்லெஸ்லியின் தலைமையான ஆங்கிலப்படை போன்ஸ்லே படைகளை அன்ஸே மற்றும் ஆரகான் இடங்களில் தோற்கடித்தது. போன்ஸ்லே தியோகன் உடன்படிக்கை மூலம் துணைப்படைத் திட்டத்தை ஏற்று கட்டாக் பகுதியை ஆங்கிலேயருக்கு அளித்தார்
- லேக் பிரபுவின் தலைமையினை ஆங்கிலப்படை சிந்தியாவின் படைகளை தோற்கடித்தது. சிந்தியா சர்ஜி அர்ஜீன்கான் உடன்படிக்கை மூலம் துணைப் படை திட்டத்தை, ஏற்று புரோச் அகமது நகர், கட்டாக் மற்றும் கங்கை யமுனை பகுதிகளை ஆங்கிலேயருக்கு அளித்தார்
- முகலாய மன்னர் இரண்டர் ஷா ஆலம் ஆங்கிலேயரின் பாதுகாப்பின் கீழ் வந்தார்
- மராத்தியர்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இழந்தனர்

மூன்றாம் மராத்தியப் போர் 1817 - 1818

- பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் பசீன் (துணை படைத் திட்டம்) உடன்படிக்கை மீறினார்
- மராத்தியர்களை ஆங்கிலேயரின் பிடியில் இருந்து விடுவிக்க சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கார் ஆகியோருடன் இரகசிய உடன்படிக்கை
- பிண்டாரியார்களை ஒழித்தமையால் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆகியோருடன் இரகசிய உடன்படிக்கை
- பிண்டாரியார்களை ஒழித்தமையால் வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது மராத்தியர்கள் கோபம் அடைந்தனர்.
- 1815ல் கெயிக்வார் அரசின் பிரதிநிதி கொலை
- 1817ல் பூனாவில் ஆங்கிலப்பிரதிநிதி மாளிகை தீக்கிரையாக்கப்பட்டது
- போன்ஸ்லே – சீத்தா பால்டிக் போரில் தோற்கடிக்கப்பட்டார்
- ஹோல்கார் - மகித்பூரில் தோற்கடிக்கப்பட்டார்
- கோர்கான் அஷ்தா - இரண்டாம் பாஜிராவ் தோற்கடிக்கப்பட்டார்

விளைவுகள்

- மராத்தியர்களின் ஆதிக்கம் நீக்கப்பட்டது
- பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது
- ஹோல்கார் துணைப்படை திட்டத்தை ஏற்றார்
- நர்மதை பகுதிகளை ஆங்கிலேயருக்கு கிடைத்தது

பிற்கால மராத்தியர்கள்:

- பிற்காலத்தில் மராத்தியர்கள் பல்வேறு இடங்களில் ஆட்சி செய்தனர்.

1. பரோடாவில் கெய்க்வாட்
2. நாகபுரியில் போன்ஸ்லே
3. இந்தூரில் ஹோல்கர்
4. குவாலியரில் சிந்தியா
5. பூனாவில் போஷ்வா

- இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை அதிகமாக எதிர்ததது மராட்டியர்கள் என்பது

குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சமய இயக்கங்கள்

- அராபி முஸ்லீம்கள் இந்தியாவின் மீது படையெடுப்பாலும், அரசர்கள் ஆதரவு பெற்றமையாலும் இந்தியாவில் இசுலாமிய சமயம் வெகு விரைவில் பரவியது. இதனால் பக்தி இயக்கங்கள் தோன்றியது. பக்தி இயக்கத்தின் காலம் 14 ஆம் நூற்றாண்டு வரை ஆகும்
- இவ்வியக்கங்கள் சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் பெரும்பாலும் தோன்றியது. துருக்கியர்கள், ஐரோப்பியர்கள், முஸ்லீம்கள் இந்தியாவில் ஆட்சி செய்தமையால் ஆரியக்கலாச்சாரம் தனது செல்வாக்கினை இழக்க நேரிட்டது. இஸ்லாமிய மதம் அரசர்களின் ஆதரவுடன் பரவ தொடங்கியது. எனவே பக்தி (அல்லது) வழிபாட்டு முறைகள்.

ஆதிசங்கரர் 788 - 820

- இவர் கேரளா காலடியில் பிறந்தார்
- இவர் மார்கம் ஞான மார்க்கம் (Strict Monism)
- இவரின் கருத்துக்கள் அத்துவைதம்
- இவர் நிறுவிய 4 மடங்கள், பத்திரிநாத், துவாரகா, பூரி, சிருங்கேரி
- இவரை 'பிரசன்னபுத்தர்' என்று அழைத்தனர்
- இவரின் சித்தாந்தம் அத்துவைத வேதாந்தம்

இராமானுஜர் 1017 – 1137

- பக்தி இயக்கத்தில் ஈடுபட்ட மகான்களின் முன்னோடி இராமானுஜர் ஆவார்
- கடவுளை அன்புக் கடல் என்றும், அழகின் இருப்பிடம் என்றும் கூறியவர் இராமானுஜர் ஆவார்.
- இவர் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தார்
- இவரது கருத்துக்கள் விசிஷ்டாத்துவைதம் (Monism)
- இவர் பக்தி மூலம் உயிர்கள் இறைவனை அடையலாம் என்று கூறினார்
- இவரது சீடர் இராமானந்தர், மாதவச்சார்யா மற்றும் வல்லபச்சார்யா
- பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே, பரமாத்மாவின் ஒரு பகுதியே ஜீவாத்மா
- இவர் சைவ சமயத்தில் சேர வேண்டும் என்று சோழ அரசர் கொடுமை படுத்தியதால் ஹொய்சல அமைச்சரிடம் அடைக்கலம் புகுந்தார்

இராமானந்தர்

- ஆனந்த பாஷ்யா என்ற உரையை எழுதினார்
- இவர் இராமானுஜரை பின்பற்றினார்
- 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார்.
- அலகாபாத்தில் பிறந்தார். இவர் ஸ்ரீ வைஷ்ணவ பிரிவைச் சார்ந்தவர்
- இவர் விஷ்ணுவை இராமர் வடிவத்தில் வணங்கினார்
- அனைத்து வகுப்பினருக்கும் இவர் உபதேசம் வழங்கினார். சாதிமுறையை புறக்கணித்தார்.
- இவரின் சீடர்கள் 12 பேர்
- முக்கியமான சீடர்கள்: கீபர், ரவிதாஸ், சேனா, தான மற்றும் பிபா
- இராமனந்தரின் பெண் சீடர் பத்மாவதி
- இவரே பக்தி இயக்கத்தின் முதல் சீர்திருத்தவாதி
- இந்தி மொழி மூலம் பக்தி பிரச்சாரத்தை

முதன் முதலில் மேற்கொண்டார்

மத்வர் (1199 – 1278)

- பிரம்ம சூத்திரம் என்னும் நூலை எழுதினார்
- இவரது கொள்கை: துவைதம்
- இவர் வைணவர்
- இராமானுஜரை பின்பற்றி பக்தி இயக்கத்தை கர்நாடகாவில் வளர்த்தவர்

நிம்பார்க்கர்

- இவர் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினார்
- இதற்கு வேதாந்த பாரி ஜாத சௌரப என்று பெயர்
- இவரின் சித்தாந்தம்: துவைத துவைதம்

சைதன்யர் (1485 – 1533)

- சிக்ஷா அஷ்டன் என்ற நூலை இயற்றினார்
- விராமணர். வங்காளத்தில் உள்ள நாடியா என்ற ஊரில் பிறந்தார். கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். சங்கீர்த்தன முறையை பிரபலப்படுத்தினார். முகா பிரபு என்று அழைக்கப்பட்டார். Gaudiya Vaishnavism எனப்படும் Bengal Vaishnavism இவர் தோற்றுவித்தது ஆகும்.
- கிருஷ்ணதாஸ் கவிராஜ் எழுதிய நூல் சைதன்னிய சரிதம்ருதம் ஆகும். இவவை பின்பற்றுபவர்கள் இவரை திருமால் அவதாரமாக கருதுகின்றனர்.

கபீர் (1440 – 1518)

- அல்லா என்றாலும் ஹரி என்றாலும் ஒன்றே.
- இவர் ராமானந்தரின் சீடர்
- கடவுள் ஒருவரே. ஆவரை கல்லிலோ (அ) புனித நூலிலோ காண முடியாது. அன்புள்ளவர்கள் இதயத்தில் தான் காண முடியும்.
- சாதி, சடங்குகளை இவர் பொருட்படுத்தவில்லை.
- பிறப்பால் பிராமணர், முஸ்லீம் நெசவாளியால் வளர்க்கப்பட்டார்
- இவரின் உததேசங்களை பங்கா தாஸ் என்பவர் Bijak என தொகுத்துள்ளார்.
- இவரை பின்பற்றியவர்கள் கபீர் பந்திகள் எனப்பட்டனர்
- முகமதிய துறவு Pir Tagi என்பவரின் கொள்கையை பின்பற்றினர்.

மீராபாய்

- இராசபுத்திர இளவரசி
- விதவையான பின் Saguna School of Bhaki என்பதன் மூலம் கிருஷ்ண பக்தி பரப்பினார்.

தாது தயாள் 1544 - 1603

- இவரின் கொள்கையடங்கிய நூல் தாதுராம் கிபாணி
- இவரின் சீடர்கள் தாது பந்திகள் என்று இயக்கத்தை துவக்கினார்கள்

துளசிதாசர்

- இவர் சங்கீர்த்தனம் எனப்படும் இசைமுறையின் மூலம் கடவுளின் புகழை பரப்பினர்.
- இவரின் சீடர்கள் இவரை மகாபிரபு என அழைத்தனர்
- இராம சரிதமனஸ் என்ற இந்தி இராமாயணத்தை எழுதினார்
- இவர் எழுதிய முக்கிய நூல்கள் ஜானிமங்கள், பார்வதி மங்கள்
- ராமாயணம், கீதாவளி, கவிதாவளி, வாயை பத்ரிக்கா போன்ற நூல்களை எழுதினார்.

வல்லபாசாரியார் (1479 – 1531)

- வல்லபாசாரியார் வாரணாசியில் பிறந்தார்.
- கிருஷ்ண பக்தர்
- இவரது தத்துவம் எபிகுரியானித் தத்துவம் போன்றது
- உயரிய பக்தி வழியாகத் தான் பிரம்மத்துடன் இணையமுடியும் என்ற கருத்து கொண்டவர்.
- இவரின் தத்துவம் சுத்த துவைதம்
- இவரின் மார்க்கம்: புஷ்டி மார்க்கம்

துகாராம் (1608 – 1649)

- இவர் வக்காரி பிரிசைச் சார்ந்தவர்
- மராத்தியர்: பூனா அருகில் தேகு என்ற கிராமத்தில் பிறந்தார்.
- பாண்டுரங்கன் எனப்படும் கிருஷ்ணனை அடங்கங்கள் எனப்படும் மராட்டிய மொழி பாடல்களில் பாடினார்

முக்கிய சமயத் தலைவர்கள்:

1. நானேஸ்வரா

- பகவத்கீதையை மராத்திய மொழியில் மொழிபெயர்த்தார்
- இந்நூல் ஞானேஸ்வரி என்று அழைக்கப்படுகிறது.

2. நாம்தேவ் 1270 - 1350

- இவர் மராத்திய மாநிலத்தை சார்ந்தவர்
- இவர் விஷ்ணுவை வித்தோபா என்ற பெயரிட்டு அழைத்தார்.
- இவருடைய பாடல்கள் சில சீக்கியர்களின் புனித நூலான குரு கிரந்த சாகிப் என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவர் நர்குண உபாசகர்.

3. ஏக்நாத்

- சுாதி முறையை ஒழிக்க பாடுபட்டார்

4. இராமதாசர்

- நூடெங்கும் ஆசிரமங்களை ஏற்படுத்தினார். மராட்டிய சிவாஜியின் உணர்வைத் தூண்டியவர்.

5. சூர் தாசர்

- சகுண பள்ளியை நிறுவியவர்
- வல்லபச்சார்யாவின் சீடர்

6. புரந்தர தாசர்

- கர்நாடகத்தைச் சார்ந்த இவர் கிருஷ்ண பக்தர் ஆவார். கர்நாடக சங்கீத கீர்த்தனைகளை இயற்றியவர். குர்நாடாக சங்கீத பிதாமகன் என்று அழைக்கப்பட்டார்.

தென் இந்தியாவில் பக்தி இயக்கம்:

- சிவனை வழிபட்டவர்கள் நாயன்மார்கள்
- மொத்த நாயன்மார்கள் 63 பேர்

முக்கிய நாயன்மார்கள்

1) அப்பர் 2) சுந்தரர் 3) மாணிக்கவாசகர்

- இவர்கள் சமயக் குரவர்கள் எனப்பட்டனர்
- ஆனைத்து நாயன்மார்களின் பாடல்களை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி

தேவராப் பாடல்களை எழுதியவர்கள்

- அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர்
- திருவாசகப் பாடல்களை எழுதியவர் மாணிக்கவாசகர்
- நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல்: பெரிய புராணம்
- இதனை எழுதியவர் : சேக்கிழார்

ஆழ்வார்கள்

- விஷ்ணுவை வழிபட்டவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர்

- இவர்கள் மொத்தம் 12 பேர்
- இவர்கள் எழுதிய பாடல்களை நாதமுனிகள் என்பவர் நாலாயிரத் திவ்ய பிரபந்தம் என்ற நூலாக தொகுத்ததுள்ளார்
- ஆழ்வார்கள் 12 பேர்கள்
- திருப்பாவை பாடல்கள் தமிழ்நாட்டில் மார்கழி மாதத்தில் பாடப்படுகிறது

சீக்கியர்கள்

குருநானக் (1469 – 1539)

- சீக்கிய சமயத்தை உருவாக்கியவர் - குருநானக்
- பிறந்த இடம் - தால்வாண்டி – நான் கானா, சாஷிப்
- இது மேற்கு பஞ்சாப்பில் உள்ளது
- பிறந்த வருடம் : 1469
- தந்தை பெயர்: மேத்தாகாலு
- தாயாரின் பெயர் - திரிப்தா
- மனைவியின் பெயர் - சுலந்தி
- மெக்கா மெதீனா சென்றார்
- ஞான ஒளி பெற்ற இடம் - சுல்தான் பூர் - பாயீன் என்ற ஆற்றில் குளிக்கச் சென்ற போது ஞான ஒளி கிடைத்தது
- இறுதியாக வாழ்ந்த இடம் - கார்த்தார் பூர்
- குருநானக்கின் கருத்துக்கள்

1. கடவுள் ஒருவரே, உருவ வழிபாடு தேவையில்லை. துறவறம் தேவையில்லை
2. ஆண்டவரின் பெயரை வழிபட வேண்டும்
3. ஆண்டவனை அறிய குரு தேவை
4. குருவை கண்டறிய ஆண்டவனின் ஆசி தேவை
5. சீக்கியர்களின் ஏணி குரு
6. உலகத்தில் பற்று இல்லாமல் வாழ வேண்டும்.
7. நாம் எதை விதைக்கின்றோமோ அதையே அறுக்கின்றோம்
8. சாதி முறையை கண்டித்தார்
9. இல்லத்திலிருந்து வழிகாட்டலை மேற்கொண்டார்

- மேற்கொண்ட பயணம் - உதாஸிஸ்
- மேற்கொண்ட பயணம் - 5
- காலையில் மேற்கொள்ளப்படும் வழிபாடு – ஜப்ஜி
- பொதுச் சமையலறை – லங்கார்
- எழுத்து முறை – குருமுகி
- துறவற வாழ்க்கை – பக்கீர்
- டாக்டர் ஜி. சி. நராங் - குருநானக் ஒரு சீர்திருத்தவாதி
- மேகாலிப், கான்சிங், தேஜாசிங் - குருநானக் ஒரு புரட்சியாளர்
- இவர் கபீர், நாமதேவர் கருத்தினை ஏற்றுக் கொண்டார்.

குரு அங்காட் 1538 - 52

- சீக்கிய மதத்தின் இரண்டாவது குரு
- இவரின் பெயர் லேஹுனா
- குருமுகி எழுத்தை அறிமுகப்படுத்தியவர்
- சீக்கிய மதத்தை தனி மதமாக்கியவர்
- ஹீமாயூன் இவரது ஆசி பெற்றார்
- லாங்கர் எனப்படும் பொதுச் சமையலறையை அறிமுகப்படுத்தினார்.

குரு	ஆண்டு	சிறப்பு
குருநானக்	1469-1539	
அங்காட்	1538-52	குருமுகி எழுத்து வடிவத்தை தோற்று வித்தார். தனி மத மாக்கினார். லாங்கர் பொது சமையல் அறை
குரு அமர்தாஸ்	1552-1874	22 மாநிலமாக பிரித்தார். இவை மஞ்சிக்கள்
குரு ராம்தாஸ்	1575-1581	அமிர்தரசஸ் என்ற நகரத்தை உருவாக்கினார். மசந்துக்கள் எனப்படும் சீடர்களை உருவாக்கினார்.
குரு அர் ஜுன்சிங்	1581-1606	ஆதி கிராந்தம் என்ற நூல் தொகுக்கப்பட்டது. அரிமாந்திர் ஆலயம் உருவாக்கினார். இளவரசர் குருருவிற்கு உதவியதால் ஜஹாங்கீரால் கொலை செய்யப்பட்டார்
குரு ஹரி கோவிந்த சிங்	1606-1645	சாச்சா பாதுஷா என்ற பெயருடன் போர் வீரரைப் போல் உடையணிந்தார். அகல்தத் என்ற கட்டிடம் உருவாக்கப் பட்டது
குரு ஹரி ராய்	1645-1661	ஷாஜஹானின் மூத்த மகன் தாராஷியை ஆதரித்தார்
குரு அரி கிருஷ்ணன்	1661-1664	3 ஆண்டுகள் மட்டுமே குருவாக இருந்தார்
குரு தேஜ் பகதூர்	1664-75	இசுலாமிய மதத்திற்கு மாற மறுத்தமையால் அவுரங்கசீப்பால் கொலை செய்யப் பட்டார்
குரு கோவி ந்தசிங்	1675-1708	கல்சா என்ற அமைப்பினை உருவாக்கினார். பாஞ்ச்பியாராக்கள் என்பவர்கள் உருவாக்கப்பட்டனர்.

குரு அமர்தாஸ் 1552 – 74

- குரு அங்காடியின் மகள் பீபி அம்ரோ இவரை மதம் மாற்றினார்
- இவர் வைணவர்
- 84 படிகள் கொண்ட கிணறு அமைத்தார்
- இவர் தம்முடைய ஆன்மிக பேரரசை 22 மாநிலமாக பிரித்தார். இவை மஞ்சிக்ககள் எனப்பட்டது.
- புதிய பிறப்பு, இறப்பு சடங்குகளை ஏற்படுத்தினார்.
- சதி என்னும் உடன்கட்டையை தடைச் செய்தார்.
- மது அருந்துதல் தடை செய்யப்பட்டது
- இவர் தங்கியிருந்த கோயில்வால் என்னுமிடத்திற்கு அக்பர் வந்து அறக்கொடைகளை வழங்கினார்
- அக்பர் யாத்திரை வரிகளை சீக்கியருக்கு நீக்கினார்.

குரு இராம்தாஸ் (1575 – 1581)

- இவர் குரு அமர்தாசின் மருமகன்
- இவரது மனைவியின் பெயர் - பீபிபாணி
- அக்பரிடமிருந்து நிலத்தினை பெற்று சக்குரு (அ) இராமதாஸ்புரம் (அ) அமிர்தசரஸ் என்ற நகரத்தை உருவாக்கினார்.
- சந்தோஷ்கார், அமிர்தசரஸ் என்ற குளத்தை வெட்டினார்
- மசந்துக்கள் எனப்படும் சீடர்களை உருவாக்கினார்
- அக்பர் இவரின் வேண்டுகோளை ஏற்று பஞ்சாப்பிற்கு ஓராண்டு வரித் தள்ளுபடி அளித்தார்
- சீக்கிய மதம் வெகுவாக பரவியது.

- இவருக்கு பிறகு குரு பதவி பரம்பரை வழியாக மாறிவிட்டது

குரு அர்ஜுன் சிங்க (1581 – 1606)

- ஆதி கிராந்தம் என்ற நூல் தொகுக்கப்பட்டது
- இதுவே சீக்கியர்களின் வேதம்
- சீக்கியர்கள் காணிக்கை பெறும் முறை உருவாக்கப்பட்டது
- இவரது சகோதரர் ப்ரீதியாவிற்கும் இவருக்கும் மோதல் ஏற்பட்டது
- அரிமாந்திர் ஆலயம் உருவாக்கினார்
- தாரன்தாரன், கர்தார்பூர் நகரை உருவாக்கினார்
- மசந்துகள் தமக்கு கீழ் மியோராக்கள் அல்லது மசந்தியாக்களை உருவாக்கினார்கள்.
- இளவரசர் குருரூவிற்கு உதவியதால் ஜஹாங்கீரால் கொலை செய்யப்பட்டார்
- இவரது கொலை சீக்கியர் ஒற்றுமைக்கு உதவியது.

குரு ஹரிகோவிந்த சிங் (1606 – 1645)

- இவரது தந்தை கொலை செய்யப்படவோ இவர் தம்முடைய ஆதரவாளர்களை போர் வீரராக மாற்றினார்
- சாச்சா பாதுஷா என்ற பெயருடன் போர் வீரரைப் போல் உடையணிந்தார்
- அகல்தத் என்ற கட்டிடம் உருவாக்கப்பட்டது. அதுவே கடவுளின் இருப்பிடம் எனப்பட்டது
- அமிர்தசரசை சுற்றி சுவர் அமைத்தார். அது ஹோல்கார் எனப்பட்டது
- இவர் முகலாய மன்னர் ஜஹாங்கீரால் கைது செய்யப்பட்டு பன்னிரெண்டு ஆண்டுகள் குவாலியரில் சிறை வைக்கப்பட்டார்
- பின்பு இவர் ஜஹாங்கீரிடம் நட்பு கொண்டார்
- ஷாஜஹான் காலத்தில் 1628ல் அமிர்தசரஸ் போர் நடந்தது. 1631ல் இரண்டாவது அமிர்தசரஸ் போர் நடந்தது
- 1634ல் தன்னுடைய தலைநகரை கிராத்பூருக்கு மாற்றிக்கொண்டார்.

குருஹர்ராய் 1645 - 61

- இவர் ஷாஜஹானின் மூத்த மகன் தாராஷியை ஆதரித்தார். அவுரங்கசீப்பை இவர் மகன் இராம்ராய் ஆதரித்தார்
- எனவே அடுத்த குருவாக இராம்ராயன் மகன் அரிகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார்

குரு அரிகிருஷ்ணன் 1661-64

- மூன்றாண்டுகள் மட்டுமே குருவாக இருந்தார்
- இளம் வயதிலேயே இவர் இறந்துவிட்டார்

குரு தேஜ்பகதூர் 1664-75

- சிவாலிக் குன்றுகளிடையே அனந்தபூத் என்ற ஆசிரமத்தில் தங்கினார்
- இவர் இசுலாமிய மதத்திற்கு மாற மறுத்தமையால் அவுரங்கசீப்பால் கொலை செய்யப்பட்டார்

குரு கோவிந்த சிங் 1675 - 1708

- சீக்கியர்களின் பத்தாவது குரு
- கடைசி குரு
- கல்சா என்ற அமைப்பினை உருவாக்கினார்
- பாஞ்ச்பியாராக்கள் என்பவர்கள் உருவாக்கப்பட்டனர்
- சீக்கியர்கள் 5 அடையாளங்களைக் கொண்டு இருக்க வேண்டும் என ஆணையிடப்பட்டது

  கேஷ் - நீண்டமுடி

  கிர்பான் - கத்தி

  கச்சா - கால்சராய்

கங்கா - சீப்பு

கரா - வளையல்

- ஆனந்தப்பூர் போரில் சீக்கியர்கள் தோல்வி அடைந்தனர்
- இவரின் 4 மகன்கள் கொல்லப்பட்டனர்
- இந்து மதத்தை காப்பாற்றினார்
- சீக்கிய படையை புத்தாதல் (முதியோர் படை) தருந்தல் (இளைஞர்படை) என் பிரித்தவர் கபூர் சிங் கோவிந்த்சிங் போல இருந்து அதிக முகலாயர்களை கொன்றவன் - பண்டா பகதூர்

இரஞ்சித் சிங்

- முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தவுடன் பஞ்சாப்பில் சீக்கியர்கள் எழுச்சி தோன்றியது
- தனித்தனியே இயங்கி வந்த 12 மிசில்களை ஒன்றுபடுத்தி ஐக்கிய பஞ்சாப்பை ஏற்படுத்தியவர் இரஞ்சித் சிங் ஆவார்
- இவர் பஞ்சாப்பின் சிங்கம் என்று அழைக்கப்பட்டார்
- 1767ல் ஆப்கானிய மன்னர் அகமது ஷா அப்தாலி இந்தியா மீது படையெடுத்தார்
- ஆப்கானி மன்னர் சாமன் ஷா 1798ல் ரஞ்சித் சிங்கை லாகூரின் ஆளுநராக நியமித்தார்
- 1802ல் அமிர்தசரசு கோட்டையைக் கைப்பற்றினார்
- 1805ல் ஆங்கிலேயருக்கு எதிராக மராத்தியத் தலைவர் ஹோல்கர் உதவி கேட்டபோது மறுத்துவிட்டார்
- 1806ல் சட்லெஜ் ஆற்றைக் கடந்து லூதியானாவைக் கைப்பற்றினார்.
- 1809ல் மின்டோ பிரபு சார்பில் சார்லஸ் மெட்காப்புடன் இரஞ்சித்சிங் உடன்படிக்கை செய்து கொண்டார். இதுவே அமிர்தசரசு உடன்படிக்கை ஆகும்.
- 1811ல் காங்கராவை கூர்க்கர்களிடமிருந்து கைப்பற்றினார்
- 1813ல் அட்டாக் பகுதியை ஆப்கானியர்களிடமிருந்து கைப்பற்றினார்.
- 1818ல் மூல்தானைக் கைப்பற்றினார்
- 1819ல் காஷ்மீரை கைப்பற்றினார்
- 1823ல் பெஷாவரை கைப்பற்றினார்
- 1836ல் லாடாக்கைக் கைப்பற்றினார்
- 1837ல் ஜாம்ராத் கோட்டையை கைப்பற்றினார்
- 1838ல் இரஞ்சித் சிங், ஆங்கியேலர் மற்றும் ஆப்கானிய மன்னர் ஷாஷுஜா ஆகியோருக்கிடையே முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது
- நாவாய் உடன்படிக்கை : இரஞ்சி சிங் சிந்துவைக் கைப்பற்ற முயற்சி செய்தபோது ஆங்கிலேயர்கள் சிந்துவை ஆண்ட அமீர்களுக்கு சலுகைகள் வழங்கி நாவாய் உடன்பாடு செய்துகொண்டனர்.

முக்கிய நூல்கள்

நூலின் பெயர்	**எழுதியவர்**
பில்ஹனர்	- விக்ரமங்க தேவசரிதம்
கல்ஹணர்	- இராச தரங்கிணி
விசாகதத்தர்	- முத்ரா ராட்சகம்
பதஞ்சலி முனிவர்	- மகா பாஷ்யம்
பாணபட்டர்	- ஹர்ஷ சரிதா
மாகா	- சிசுபாலபதா
கங்கா தேவி	- மதுரா விசயம்
வல்லாளர்	- போஜ பிரபந்தம்
மெகஸ்தனிஸ்	- இண்டிகா
மிருதுங்கன்	- தராவளி

அசுவகோஷ் - புத்த சரிதம்

தண்டின் - தச குமார சரிதம்

பாரவி - கிராதர்ஜீனியா

குமாரதாசர் - ஜானகி ஹரனா

மகேந்திர விக்ரமர் - மத்தன விலாசம்

மயூரா - சூர்ய சடாகா

வாக்பதி - கவுடவாகு

ஜெயசிம்மர் - குமார பால சரிதம்

மேதுங்கர் - பிரபந்தச் சிந்தாமணி

கலைகள்

புத்தமதம் - சாஞ்சி ஸ்தூபி, அஜந்தா, எல்லோரா

குப்தர்கள் காலம்

விஷ்ணு கோவில் - தெகுவா

சிவா கோவில் - நாகதா

பார்வதி கோவில் - அஜய்கார்

தசாவதார கோவில் - தியோகார்

சோளங்கி காலம்

தில்லாரா கோவில் - அபு மலை

சோழர்கள் காலம்

பிரகதீஸ்வரர் ஆலயம் - தஞ்சாவூர்

கங்கை கொண்ட சோழபுரம்

நாயக்கர்கள் காலம்

மதுரை – மீனாட்சி அம்மன் ஆலயம்

விஜயநகரம்

ஹம்பி – விட்டல்சாமி கோவில்

ஹெய்சலா காலம்

பேலூர் - சென்னை கேசவர் ஆயலம்

ஹெய்சலஸ்வரர் - ஹலபேடு

பல்லவர்கள் காலம்

ரத கல்வெட்டு கோவில்கள் - மாமல்லபுரம்

காஞ்சி கைலாசநாதர் கோவில்

சாண்டல்யர்கள்

மகாதேவ கோவில், கஜீரகோ ஆலயம்

ஷெர்ஷா – பூர்ண குயிலா

சிக்கந்தர் லோடி – ஆக்ரா

கியாசுதீன் துக்ளக் - துக்ளதா பாத்

அக்பர்

ஆக்ரா கோட்டை, பூலான் தார்வாசா பதேபூர் சிக்ரி, ஹீமாயூன் சமாதி லாகூர் கோட்டை

ஷாஜஹான்

ஜீம்மா மசூதி, மோதி மசூதி, செங்கோட்டை தாஜ்மஹால்

அவுரங்கசீப்

செங்கோட்டை மசூதி, பனராஸ் மசூதி, மதுரா மசூதி

ஆனந்தசர்ம கங்கர்

பூரி – செகன்நாதர் ஆலயம்

முதலாம் நரசிம்மர்

கொனார்க்கில் உள்ள சூரிய ஆலயம்

குப்தர்கள் - அஜந்தா ஓவியங்கள்

தில்லியில் உள்ள இரும்பு தூண்

நரசிம்மவர்மன் - ராமேஸ்வரம் கோவில்

இராசராச சோழன் - தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம்

ஆதில் ஷா – சார்மனார், ஹைதராபாத்

இல்துமிஷ், குதுப்மினார்

அலாவுதீன் கில்ஜி – கோஷக்-இ-சிரி

பெரேஸ் துக்கள்

காளி மசூதி, லால்கும்பா

சிக்கிந்தர் லோடி – மோத் சி மசூதி

அகமது ஷா – சாந்த் மினார், அகமதாபாத்

பொற்கோவில் நகரம் அமிர்தசரஸ்

மிகப்பெரிய மிருகக் காட்சி சாலை கல்கத்தா

ஐரோப்பியர்கள் இந்திய வருகை

- 1453ல் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபின் பகுதியைக் கைப்பற்றினார். எனவே

ஐரோப்பியர்கள் புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது

- எனவே ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாடுகளின் அரசர்கள் மாலுமிகளை ஊக்குவித்தனர்
- பார்த்தலோமியா டயஸ் கி. பி. 1489ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவில் தென்முனையை அடைந்தார்.
- புயல் காரணமாக மேற்கொண்டு பயணம் தொடர இயலவில்லை. எனவே இம்முனையை புயல்முனை என்று அழைத்தார்.

போர்த்துகீசியர்

- இந்தியாவிற்குக் கடல் வழி காண்பதில் வெற்றி பெற்ற முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுகல்
- ஹென்றிமோர் என்ற போர்ச்சுக்கீசிய அரசரின் உதவி பெற்று வாஸ்கோடகாமா ஆப்ரிக்காவில் உள்ள நன்னம்பிக்கை முனை வழியாக 1498, மே மாதம் 27ம் நாள் இந்தியாவில் உள்ள கள்ளிக்கோட்டையை வந்து அடைந்தார்
- கள்ளிக்கோட்டைம ன்னரான சாமரினிடம் வாணிக உரிமையைப் பெற்றார்
- 1501ல் கப்ரால் என்பவர் வாணிகம் செய்ய இந்தியா வந்தார்
- 1502ல் வாஸ்கோடகாமா மீண்டும கள்ளிக்கோட்டை வந்தடைந்தார்
- 1501ல் செப்டம்பர் மாதம் Pedro Alvarez Cabral என்பவர் கள்ளிக்கோட்டையில் பண்டக சாலை நிறுவினார். இதுவே முதல் ஐரோப்பியா பண்டகசாலை ஆகும்
- கள்ளிக்கோட்டை, கொச்சின், கண்ணனூர் ஆகிய இடங்களில் போர்த்துக்கீசியர் பண்டக சாலைகள் நிறுவினர்
- இந்தியாவில் நிறுவப்பட்ட போர்த்துக்கீசியப் பற்றிடங்களை நிருவகிக்க அரசப்பிரதிநிதி (Viceroy) யை நியமிக்கப்பட்டார்.
- 1507ல் போர்ச்சுக்கீசியர்கள் சென்னை வந்தனர். அவர்களின் தலைவர் Madra எனவே இதனை Madras என்று அழைத்தனர்.
- போர்த்துக்கீசியர்களின் வருகையை அரவு நாட்டவர்கள் விரும்பவில்லை
- அரபியர்களின் தூண்டுதலால் 1508ல் கள்ளிக்கோட்டை சமோரின், குஜராத் சுல்தான் முகமது பெகரா ஆகியோர் சவுல் என்னுமிடத்தில் போர்ச்சுக்கீசியரை தோற்கடித்தார்.
- 1509ல் மீண்டும் போர்ச்சுக்கீசியர்கள் டையு என்னுமிடத்தில் வெற்றி பெற்றனர். டையுல் பண்டக சாலை கட்டப்பட்டது.

பிரான்சிஸ்-டி-அல்மைடா (1505-1509)

- 1505ல் பிரான்சிஸ்-டி-அல்மைடா முதல் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்
- கடற்படையின் வலிமையைப் பெருக்கினார். அவர் பின்பற்றிய கொள்கை 'நீல நீர்க் கொள்ளை' என அழைக்கப்பட்டது
- அல்மைடா மற்றும் அவரது மகன் இருவரும் 1509ல் எகிப்தியர்களால் கொல்லப்பட்டார்

அல்போன்சா-டி-அல்புகர்க் (1509-1515)

- இவரைப் போர்த்துக்கீசியர்கள் 'மாமனிதர்' எனப் போற்றுகின்றனர். இவரே இந்தியாவில் போர்த்துக்கீசிய ஆட்சியை நிறுவியர்

- 1510ல் கோவாவை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார்
- பின்னர் அவர்களின் தலைநகராயிற்ளு. 1511ல் மலாக்காவைக் கைப்பற்றினார்.
- கொச்சியில் அரசர் அனுமதியுடன் இரு கோட்டையைக் கட்டினார்
- விஜயநகர அரசுடன் தன் உறவை பலப்படுத்தியவர் இவரே
- சதி ஒழிப்பில் வில்லியம் பெண்டிங் பிரபுவிற்கு முன்னோடியாக அல்போன்சா-டி-அல்புகர்க்கு திகழ்ந்தார்
- 1515ல் பாரசீக வளைகுடாவில் ஆர்முஸ் துறைமுகத்தை அமைத்தார்

இவரின் முக்கிய ஆட்சி முறைகள்:

1. சில பகுதிகளை நேரடியாக கைப்பற்றி அவற்றை ஆட்சி செய்தல
2. சில பகுதிகளை காலணியாக்குதல்
3. கைப்பற்ற இயலாத பகுதிகளில் பண்டகசாலை நிறுவுதல்
4. பெரும் வணிகர்களை போர்ச்சுகல் நாட்டின் வல்லமையை ஏற்றுக்கொள்ளச் செய்தல்
5. இந்திய உயர்குடி பெண்மணிகளை போர்ச்சுகீசியர்களுக்கு திருமணம் செய்தல்

நினா டி குன்கா:

- 1528ல் போர்ச்சுக்கீசிய கவர்னராக நியமிக்கப்பட்டார்
- 1531ல் குஜராத் கடற்கரையில் சவுல் என்னுமிடத்தில் கோட்டை கட்டினார்
- 1534ல் பசீன் கைப்பற்றுதல்
- 1537ல் டையு கைப்பற்றுதல்
- 1559ல் டாமன் கைப்பற்றுதல்
- 1572ல் அக்பர் குஜராத்தை கைப்பற்றுதல்
- 1640ல் டச்சுக்காரர்கள் மலாக்காவை கைப்பற்றுதல்
- 1739ல் மராத்தியர்கள் பசீனை கைப்பற்றுதல்
- 1961 வரை கோவா, டையு, டாமன் இந்தியாவுடன் இணைப்பு

தோல்விக்கான காரணங்கள்:

- 1580ல் போர்ச்சுகீசியர் நாடு ஸ்பெயின் ஆட்சியின் கீழ் வந்தது
- திறமையற்ற வைஸ்ராய்கள்
- விசயநகர வீழ்ச்சி
- டச்சு, ஆங்கிலேயர் எழுச்சி, வலிமையற்ற கடற்படை, பேராசை மற்றும் பிரேசில் நாட்டை போர்ச்சுக்கீசியர்கள் கண்டறிதல்
- 1601ல் நெதர்லாந்து கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்டது
- 1616ல் தஞ்சாவூரை ஆண்ட ரகுநாத நாயக்கரின் அனுமதிப் பெற்று டேனியர்கள் தென்னிந்தியாவில் 1620ல் தரங்கம்பாடி என்னுமிடத்தில் வணிகத் தலங்களை அமைத்தனர்
- தரங்கம்பாடியல் Fort – Bonusberg (Dansborg) என்ற கோட்டையை அட்மிரல் Ove Gedde கட்டினார்.
- சேராம்பூர் என்னுமிடத்தில் டேனியர்கள் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டார்.

டச்சுக்காரர்

- 1592ல் அம்ஸ்டர்டாம் வணிகர்களால் டச்சுக் கம்பெனி துவங்கப்பட்டது
- 1597ல் இந்தியாவில் இருந்து திரும்பிய காரணிலியஸ் ஹட்மேன் என்ற டச்சு வியாபாரி பெரும் செல்வத்துடன திரும்பினார்
- பின் 1602ல் டச்சுக் கிழக்கிந்திய நிறுவனம்

தொடங்கப்பட்டது. 1641ல் டச்சுக்காரர்கள் போர்த்துக்கீரியர்களிடமிருந்து மலாக்காவைக் கைப்பற்றினர்

- 1609 ஆம் ஆண்டு பழவேற்காடு என்னுமிடத்தில் டச்சுக்காரர்களின் முதல் கோட்டை கட்டப்பட்டது
- 1623ல் டச்சுக்காரர்கள் ஆங்கிலேயரை அம்பாயினா என்னுமிடத்தில் படுகொலை செய்தார். இதுவே அம்பாயினா படுகொலை எனப்பட்டது
- 1658ல் இலங்கையையும், பின்னர் நாகப்பட்டினத்தையும் போர்ச்சுக் கீசியர்களிடமிருந்து கைப்பற்றினார். நாகப்பட்டினம் அருகேயுள்ள தரங்கம்பாடியில் கோட்டை எழுப்பினார்.
- முக்கிய டச்சு வணிக நிறுவனங்கள்: மசூலிப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், புலிகாட், சூரத், நாகப்பட்டினம், கொல்லம், கொச்சி, கண்ணனூர்
- 1845ல் தங்களது வணிக நிறுவனங்களை ஆங்கிலேயருக்கு விற்றனர்

ஆங்கிலேயர்

- 31-12-1600ல் இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் இலண்டன் கிழக்கிந்திய வாணிக நிறுவனத்திற்கு இந்தியா, கீழை நாடுகளுடன் வாணிகம் செய்யும் சிறப்புரிமையை The Governor and Company of merchants of London என்ற வியாபார குழுமத்திற்கு வழங்கினார்.
- 1601ல் சூரத் பண்டக சாலை துவக்கம்
- 1608ல் வில்லியம் ஹாக்கின்சு, ஜஹாங்கீரைச் சந்தித்து சூரத் நகரில் வணிக உரிமையைப் பெற்றார்.
- ஆனால் போர்ச்சுக்கீசியர்கள் அதனை ஏற்கவில்லை. எனவே இந்த உரிமை பின் முகலாயர்களால் ரத்து செய்யப்பட்டது
- 1615ல் சர் தாமசு ரோ என்பவர் முதலாம் ஜேம்ஸ் ஒப்புதலுட்ன ஜஹாங்கீரைச் சந்தித்து வாணிக உரிமைகளைப் பெற்றார். சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச் நகரில் பண்டக சாலை
- ஆங்கிலேயர் ஆரம்கான், மசூலிப்பட்டினம் ஆகிய இடங்களில் வரிணக மையங்களை ஏற்படுத்தினார்.
- சர் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் 22.8.1639ல் சென்னையை சந்திரகிரி அரசன் சென்னப்ப நாயக்கரிடமிருந்து விலைக்கு வாங்கி 23.4.1640 ல் புனித ஜார்ஜ் கோட்டையை கட்டிக்கொண்டனர்
- பின்னர், பாலசூர், அரிஹரபூர், ஹுக்ளி முதலான இடங்களில் பண்டக சாலைகளை நிறுவினர்
- ஆங்கிலமருத்துவரான வில்லியம் ஹமில்டன் வங்காள ஆட்சியர் உறவினர் ஒருவரை நோயில் குணப்படுத்தியதற்காக 1651ஆம் ஆண்டு ஹுக்ளியில் வணிகத் தலம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது
- 1661ல் பிரான்சு நாட்டு இளவரசி காதரினை இரண்டாம் சார்லஸ் மணம் செய்து, பம்பாய் நகரினை பெற்றார்
- 1661ல் மும்பையை இரண்டாம் சார்லசிடமிருந்து இரண்டன் வாணிக நிறுவனம் வருட குத்தகை 10 பௌண்டு செலுத்தி பெற்றுக்கொண்டது

- கல்கத்தாவில் பண்டக சாலை நிறுவ 1669ல் அவுரங்கசீப்பிடம் இசைவுப் பெற்றனர்

பிரெஞ்சுக்காரர்கள்

- 1664ல் பதினான்காம் லூயி அரசரும், அவரது அமைச்சர் கால்பர்ட் ஆகியோரின் ஆலோசனைப்படி பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனம் பிரான்சிஸ் கரோன் என்பவரின் தலைமையில் தொடங்கப்பட்டது
- 1666ல் பிரான்சின் தூதுவர்கள் அவுரங்கசீப்பை சந்தித்து இந்தியாவில் கோட்டைகள் அமைக்கவும், வாணிகம் செய்யவும் இசைவு பெற்றனர்
- 1667ல் பிரெஞ்சுப் பண்டகசாலை சூரத்தில் பிரான்சுவா கரோன் என்பவரால் துவக்கப்பட்டது.இதுவே பிரெஞ்சுக்காரர்களின் முதல் பண்டகசாலை ஆகும்.
- 1669ல் மசூலிப்பட்டினத்தில் பண்டகசாலை
- 1673ல் பாண்டிச்சேரியில் பண்டகசாலை
- பிற வணிக தலங்கள்: சந்திரநாகூர், மாகி ஏனாம், காரைக்கால்
- 1672ல் சாந்தோம் பகுதியை பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றினார்
- 1673ல் கோல்கொண்டா சுல்தான் மற்றும் டச்சுப்படைகளால் சாந்தோம் கைப்பற்றப்பட்டது

மார்ட்டின் 1672 - 1706

- 1672ல் பிரெஞ்சு - இந்தியப் பகுதிகளின் தலைமை இயக்குநராக மார்டின் நியமிக்கப்பட்டார்
- இவரே இந்தியாவில் பிரெஞ்சு ஆட்சியை நிறுவியவராவர். இவர் பீஜப்பூர் அரசரிடம் பாண்டிச்சேரியைப் பெற்றார்
- வங்காளத்தில் செயிஷ்டகான் என்ற நவாப்பிடமிருந்து சந்திரநாகூரை 1675ல் பெற்றனர்
- அந்நகரே வாணிகத்திற்குத் தலைமை இடமாயிற்று. பின்னர் சந்திரநாகூர், பாலாசூர், காசிம்பஜார், மாஹி, காரைக்கால் ஆகிய இடங்களில் பண்டகச் சாலைகள் ஏற்படுத்தினர்
- 1693ல் பாண்டிச்சேரி டச்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. பின் Ryswick ஒப்பந்தப்படி பாண்டிச்சேரி 1697ல் மீண்டும் பிரெஞ்சுக்காரர்களிடம் வழங்கப்பட்டது
- 1707ல் அவுரங்கசீப் இறந்தவுடன் ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் - அரசர்கள் - நவாப்புகள் தொடர்ந்து போர் செய்தனர்.
- மார்டினுக்குப் பின் வந்த திறமையான தலைமை இயக்குநர்கள்

1. Lenoir
2. Dumas (1735 – 1741)

- 1721ல் மெரிஹியஸ் கைப்பற்றப்பட்டது
- 1725ல் மாகி கைப்பற்றப்பட்டது
- 1739ல் காரைக்கால் கைப்பற்றப்பட்டது

இராபர்ட் கிளைவ்:

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியில் சென்னையில் ஒரு எழுத்தராக தனது பதவியை இந்தியாவில் துவக்கியவர்
- 1751ல் ஆற்காட்டை சந்தாசாகிப்மிடமிருந்து கைப்பற்றினார்.
- 1774ல் இங்கிலாந்திற்கு திரும்பி சென்றார். அங்கு தற்கொலை செய்து கொண்டார்

முதல் கர்நாடகப் போர் 1746 – 1748

காரணம்: ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர்

கர்நாடக நிலைமை:

- கர்நாடகம் என்பது கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் அதன் பின்னிலத்தை குறிக்கும் பகுதியாகும்
- இது ஆற்க்காட்டை தலைநகராக கொண்டு தக்காண சுபேதாரின் கீழ் ஒரு மாகாணமாக நவாபு என்ற பட்டத்துடைய கவர்னரால் ஆளப்பட்டது

சென்னை நிலைமை:

- 1734ல் மராட்டியர்கள் கர்நாடகத்தில் நுழைந்து அதன் கவர்னர் தோஸ்து அலி என்பவரை கொன்று அவரது மருமகன் சந்தா சாகிப்பை சிறைபிடித்து சத்ரா என்ற இடத்திற்கு கொண்டு சென்றார். தோஸ்து அலியின் மகன் சப்தார் அலி ஒரு கோடி ரூபாய் கொடுத்து தமது உயிரை காப்பாற்றிக் கொண்டார். பின் சப்தார் அலி கொலை செய்யப்பட்டார். பின் சப்தார் அலியின் மகன் நவாப்பாக நியமிக்கப்பட்டார். இது கர்நாடக அரசியலில் அச்சத்தை ஏற்படுத்தியது. இவ்வசத்தைப் போக்க தக்காண சுபேதார் அன்வர் உத்தீன் என்பவரை கர்நாடக நவாப்பாக நியமித்தார். தோஸ்து அலி உறவினர்கள் அன்வர் உத்தீனை ஏற்கவில்லை.

ஐரோப்பிய நிலைமை:

- ஐரோப்பியாவில் 1740ல் நடந்த ஆஸ்திரிய வாரிசு உரிமைப் போரில் இங்கிலாந்தும் பங்கேற்றது. இதில் இங்கிலாந்தும், பிரான்சும் எட்டு ஆண்டுக்காலம் நெதர்லாண்டில் போரிட்டது. எனவே இந்தியாவில் உள்ள இங்கிலாந்து மற்றும் பிரான்சு நாட்டவர்களிடம் போர் மேகம் சூழ்ந்தது.
- சென்னையில் உள்ள ஆங்கிலேயரை காக்கும் பொருட்டு ஒரு படை வந்தது. பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே (பாண்டிச்சேரி கவர்னர்) கர்நாடக நவாப் அன்வாருத்தீனை துணைக்கு அழைத்தார். அன்வாருத்தீன் ஆங்கிலேயருக்கு எச்சரிக்கை விடுத்தார். இதனால் ஆங்கிலேயருக்கு வந்த படை திரும்ப சென்று விட்டது. இருப்பினும் டியூப்ளே மொரிஷியஸ் தீவின் பிரெஞ்சு ஆளுநர் லா பொர்டனேயை பெரும் கடற்படைப் பிரிவுடன் வரச் செய்தார். சென்னையை கைப்பற்றிய லா போர்டனே சென்னையை 40000 பவுன்களுக்காக ஆங்கிலேயரிடமிருந்து சென்னையைக் கைப்பற்றினார்.

அடையார் போர் 1746

- ஆங்கிலேயர் வசமிருந்த சென்னையை டியூப்ளே மீண்டும் கைப்பற்றினார். சென்னையை இழந்த ஆங்கிலேயர்கள் அன்வாருத்தீனிடம் நியாயம் கேட்டனர். மேலும் டியூப்ளே சென்னையைக் கைப்பற்றியவுடன் அன்வாருத்தீனிடம் தருவதாக வாக்களித்தார். வாக்களித்தபடி அவர் செய்யவில்லை. எனவே அன்வாருத்தீன் பெரும் படையை பிரெஞ்சுகாகரர்களுக்கு எதிராக அனுப்பி வைத்தார். அப்படை தோல்வியுற்றது. இப்போர் அடையார் போர் எனப்பட்டது. வெற்றி பெற்ற பிரெஞ்சுப் படைகள் ஆங்கிலேயர் பாண்டிச்சேரி மீது போர் தொடுத்தனர். பிரெஞ்சுக்காரர்கள் நன்கு பாதுகாத்தமையால் பாண்டிச்சேரியை வெல்ல இயலவில்லை.

அய்லாஷாபெல் உடன்பாடு 1748

- ஆஸ்தீரிய வாரிசு உரிமைப்போர் அய்லாஷபெல் உடன்பாட்டுடன் முடிவடைந்தது. அதன்படி சென்னையை மீண்டும் ஆங்கிலேயருக்கு தர வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு பதிலாக வட அமெரிக்காவில் இருந்த லூயிஸ்பார்க்கை பிரான்சிற்கு தந்தனர்.

இரண்டாம் கர்நாடகப் போர்கள் 1749 – 54

காரணம்: தக்காணம் - கர்நாடகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

ஆம்பூர் போர் 1749

பிரெஞ்சு அணி: டியூப்ளே, கர்நாடக நவாப் சந்தாசாகிப், ஹைதராபாத் முசாபர் ஜங்.

ஆங்கிலேயர் அணி: ஆங்கிலேயர், ஹைதராபாத் நிஜாம் மகன் நாசிர் ஜங்

நிகழ்வுகள்: இப்போது தக்காணத்திலும், கர்நாடகத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளால் ஏற்பட்டது. 1748ல் ஐதராபாத் நிஜாம் உல்முல்க் மரணமடைந்தார். அவரது இரண்டாம் மகன் நாசிர் சங்கும், பெயரன் முசாப் சங்கும் நிசாமின் வாரிசாக போட்டியிட்டனர்.

- ஆற்காட்டிலும் வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. நவாப் அன்வாருதீனுக்கு எதிராக அவர் மருமகன் சந்தாசாகிப் போட்டியிட்டார். ஐதராபாத்திலும், ஆற்காட்டிலும் ஏற்பட்ட பதவிப் போட்டிகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள டியூப்ளே விரும்பினார். எனவே மராட்டியரால் சிறை செய்யப்பட்ட சந்தா சாகிப்பைப் பெருந்தொகையைப் பணயமாகக் கொழுத்து விடுவித்தார். அவரை ஆற்காட்டின் நவாப் ஆக்க விரும்பினார். ஐதராபாத்தில் முசாபர் சங்கை நிசாமாக்க முயன்றார். மாறாக ஆங்கிலேயர் நாசிர் சங்கையும், அன்வாருதீனையும் ஆதரித்தனர்.
- 1749ல் அன்வாருதீன் படைகளைப் பிரெஞ்சு படைகள் தோல்வியுறச் செய்தன. அன்வாருதீன் போரில் மரணமடைந்தார். அவரது மகன் முகமது அலி தப்பிச் சென்று திருச்சிராப்பள்ளி கோட்டையுள் தஞ்சம் அடைந்தார். இதனால் கர்நாடகம் முழுமையும் சந்தாசாகிப் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
- ஐதராபாத்தில் நடைபெற்ற போரில் நாசரி சங், முசாபர் சங்கைத் தோல்வியுறச் செய்தார். நாசிரின் படைகள் நாசிரை விட்டு விலகி அவரைக் கொன்றன. இதனால் முசாபர் சங் 50,000 பவுன்களை ஆங்கிலேயருக்கு அளித்து நிசாமானார். அவரும் இறந்துவிட்டதால் நிசாமின் மூன்றாவது மகனான சலபத்சங் நிசாமானார். பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி நிசாமின் படைகளை நவீனமாக்கினார்.
